விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2037 | தை 01 | சனிக்கிழமை (14.01.2006) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 26

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## இராஜபாதை-குளப்பிட்டியில் நேற்றுக் கிரனைட் தாக்குதல்

### பொலிஸ் கான்ஸ்டபிள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இராஜபாதையில் நேற்று முற்பகல் 11 மணியளவில் பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட கிரனைட் தாக்குதலில் ஒருவர் காயமடைந்தார்.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த எம்.பியந்த (வயது-46) என்ற பொலிஸ் உத்தியோகஸ்தரே காயமடைந்தவராவர்.

இவர் சிகிச்சைக்காக பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சம்பவம் இடம் பெற்றவேளை அவ் வழியால் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் பீதி காரணமாக மதிலுடன் மோதியதில் காயமடைந்துள்ளனர்.

அருமைநாயகம் அனுசன் (வயது-21) (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் இடம்பெயரும் மக்களுக்கு உடனடி மனிதாபிமான உதவி தேவை

### தொண்டு நிறுவனங்களிடம் தங்கன் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில் இருந்து பாதுகாப்புத் தேடி தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிக்கு இடம் பெயர்ந்து வரும் மக்களுக்கு உடனடி மனிதாபிமான உதவிகள் தேவையாக உள்ளதாக அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நேற்று வன்னியில் இயங்குகின்ற சர்வதேச உதவி நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

தமிழர் தாயகத்தில் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் படையினர் மேற்கொண்டுவரும் படுகொலைகள், கைதுகள், பாலியல் வல்லுறவுகள், துன்புறுத்தல்கள், காணாமல் போதல் என்பவற்றால் அச்சமடைந்து யாழ்.குடாநாடு உட்பட தமிழர் தாயகத்தின் பல பகுதிகளில் இருந்தும் நாளுக்கு நாள் தமிழ் பேசும் மக்கள் இடம் பெயர்ந்து தமிழீழ (12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தாக்குதல்களை நிறுத்த அரசாங்கத்தினால் மட்டுமே முடியும்

## தமிழ் மக்கள் மீதான தாக்குதலுக்கு ஆதாரம் உண்டு என்கிறது க.கா.குழு

(கொழும்பு)

இராணுவத்தினரின் அதிகரிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக பொதுமக்கள் பாரியளவில் துன்புறுத்தப்படுகின்றனர். இதற்கான ஆதாரங்களும் வெளியாகியுள்ளன.

இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களின் காரணமாக துன்புறுத்தல்கள் தமிழ்மக்கள் மீதே திணிக்கப்படுகின்றது. இத்தகைய சம்பவங்கள் இடம் பெறுவதை தடுப்பதற்கு அரசாங்கமும் இராணுவத்தினருமே நடவடிக்கை எடுக்க வேண்டுமென கண்காணிப்புக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. கண்காணிப் புக்குழு நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இது தெரிவிக்கப் பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)




## வன்முறைகளை நிறுத்தாவிட்டால் சிறிய முகாம்கள் தாக்கப்படும்

### இராணுவத்திற்கு மக்கள் படை எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களையும் அப்பாவி இளைஞர்களையும் கைது செய்து, பின்னர் சுட்டுக் கொன்று விட்டு அவர்களது உடல்களை இராணுவம் வீசி எறிகின்றது.

சோதனை என்ற பெயரில் இரவில் வீடுகளில் புகுந்து எமது சகோதரிகளையும் தாய்மார்களையும் இம்சை செய்கின்றது. மக்கள் படையினராகிய நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் நம்மை வெளிப்படுத்தியுள்ளோம்.

இருந்தும் அப்பாவி பொது மக்களைக் கொன்றொழிப்பதன் மூலம் எமது தாக்குதல்களையும் விடுதலை உணர்வையும் ஒடுக்கலாம் என சிங்கள இராணுவம் கனவு காண்கின்றது. அது வெறும் பகற்கனவு என்பதை இராணுவம் விரைவில் உணரும்.

இனிவரும் காலத்தில் எமது தாக்குதல்களை விரிவுபடுத்தவுள்ளோம். எமது தாக்குதலுக்குப் பயந்தோடிவிட்டுப் பின்னர் வந்து அப்பாவி மக்களை தாக்குவதையும் சுட்டுக்கொலை செய்வதையும் கைது செய்வதையும் சிங்கள இராணுவம் நிறுத்தாவிடில் அடுத்த கட்ட நடவடிக்கையாக நாம் காவலரண்களையும் சிறிய முகாம்களையும் தாக்குவோம் என பொங்கியெழும் மக்கள் படை இராணுவத்தினருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் பொங்கியெழும் மக்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்துறைப் பொறுப்பாளருடன் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பு

### யாழ்.நிலைமைகள் குறித்து ஆராய்வு

(பளை)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் யாழ்.மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று இடம் பெற்றது.

நேற்றுக் காலை பளையில் உள்ள யாழ்.மாவட்ட நிர்வாகசேவை செயலகத்தில் இச் சந்திப்பு இடம் பெற்றது. இச் சந்திப்பில் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளருடன் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ,சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தற்போது யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றுவரும் இராணுவம் மற்றும் அதனுடன் சேர்ந்தியங்கும் துணைக்குழுக்களினால் அப்பாவி மக்கள் மீது மேற்கொள்ளும் தாக்குதல்கள் மற்றும் படுகொலைகள், பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள், அப்பாவி இளைஞர்கள் மீதான காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் என்பவற்றை சர்வதேச சமூகத்துக்கு அம்பலப்படுத்துவது தொடர்பாகவும் யாழ்.மக்கள் எதிர்நோக் (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com,reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# அமரர் செல்லையா தம்பித்துரை

## ஞாபகார்த்தமாக 'மஞ்சவனப்பதியினிலே'

## இசைநாடா வெளியீட்டுவிழா




வெளியீடு : மஞ்சவனப்பதி இந்து இளைஞர் சபை, லண்டன், கனடா - கிளை, 2005.

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தின் புகழ்பாடும் கலாபூஷனம், கலாரத்னா, அமரர் யாழ். **வீரமணி ஐயர்** அவர்களால் இயற்றி இந்திய இலங்கை கலைஞர்களால் வடிவமைக்கப்பட்ட 'மஞ்சவனப் பதியினிலே' இசை நாடா வெளியீட்டு விழா

காலம்:- 14.01.2006 தைப்பொங்கல் தினமான இன்று

நேரம்:-பிற்பகல் 2 மணி

இடம்:-ஆலய மண்டபம்

சிறப்பு நிகழ்வு அப்சராஸ் புகழ் கலாரத்னா என்.ரகுநாதன் நல்லூர் ராகம்ஸ் இசைக்குழுவுடன் இணைந்து வழங்கும் இன்னிசை நிகழ்வு இடம் பெறும்.

## நிகழ்ச்சி நிரல்

மங்கள இசை:- குகன் குழுவினர் தாவடி

மங்கள விளக்கேற்றல்:-திரு ந.விசுவலிங்கம் (சட்டத்தரணி,பிரசித்த நொத்தாரிசு)

தலைமை:- திரு மு.திருஞானசம்பந்தபிள்ளை

வரவேற்புரை:-திரு ஞா. காண்டீபன்

ஆசியுரை:-திருமதி நாச்சியார் செல்வநாயகம் (தலைவர் இந்துநாகரிகத்துறை யாழ்.பல்கலைக்கழகம்)

வெளியீட்டுரை திரு.ந.விஜயசுந்தரம் (பிரதம ஆசிரியர் வலம்புரி நாளிதழ்)

மதிப்பீட்டுரை:-கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் (வாழ்நாள் பேராசிரியர் யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்புரை:- இ.இராசலிங்கம் (செயலாளர் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்)

நன்றியுரை:- திரு.த.சண்முகராஜ்

விசேட நிகழ்வாக
ராகம்ஸ் இசைக்குழுவின் இன்னிசை
ஒலி-மகாமினி
ஒளி-மனோலைற்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**
**செல்லையா தம்பித்துரை குடும்பத்தினர்**

# யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாக்க சமாதானப் பேச்சுவார்த்தைகள் அவசியம்

## அமைதிக்கான ஆதரவுக்குழு வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாக்க இரு தரப்பினரும் பேச்சுக்களை நடதத வேண்டியது அவசியம் என்று இலங்கையின் அமைதிக்கான ஆதரவுக் குழு வலியுறுத்தியுள்ளது.

அமைதிக்கான ஆதரவுக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் இதுபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த டிசம்பர் 25ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 3ஆம் திகதி வரை வடக்கு-கிழக்கில் மட்டும் 40 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், அரச படையினர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், பொலிஸார் என அனைவரும் உயிரிழந்துள்ளனா.

இத்தகைய ஆயுத நடவடிக்கைகளால் மக்களிடத்தில் பாதுகாப்பற்ற அச்ச நிலை உருவாகியுள்ளது.

குற்றவாளிகளைத தேடுகிற நடவடிக்கையால் கொழும்பு போன்ற இடங்களில் தமிழர்கள் பாதுகாப்பற்ற சூழ்நிலையை உணர்ந்து வருகின்றனர்.

இந்த நிலைமைகளை முடிவுககுக்கொண்டுவர இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் உடனடிப் பேச்சுக்கு திரும்பவேண்டும். ஆயுதக் குழுக்களின் ஆயுதக் களைவு மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பான யுத்த நிறுத்த ஒப்பந்த சரத்துகள் கடைப்பிடிக்கப்படவேண்டியது அவசியம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஈடுபாட்டோடு செயற்படுத்த வேண்டும். இது தரப்பினரது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சட்டம், ஒழுங்கை காப்பாற்றி மீண்டும் யுத்தம் ஏற்படாமல் தடுக்க வேண்டும். இதற்காக இரு தரபபும் நேரடிப் பேச்சுக்களை உடனே நடத்தவேண்டும்.

புங்குடுதீவில் இளையதம்பி தர்சினி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டமை திருகோணமலையில் 5 தமிழ் மாணவர்கள படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக கூறப்படுதல் தொடர்பாக அரசாங்கம் உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் இந்த சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை நீதியின் முன் அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

சுற்றிவளைப்பு மற்றும தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரசாங்கம் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். இந்த நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்டவர்களை சந்தித்து உரிய விசாரணைகளை மேற்கொள்ள தேசிய மனித உரிமைகள் ஆணையத்துக்கு அனுமதி அளிக்கவேண்டும்.

அதேபோன்று இராணுவத்தினரை ஆத்திரமூட்டும் ஆயுத நடவடிக்கைகளை விடுதலைப்புலிகள் உடனே கைவிட வேண்டும்.

அமைதி முயற்சிகளை வலுப்படுத்தவும் அமைதிப் பேச்சுக்களை முனனெடுக்கவும் சர்வதேச சமூகம் முன்முயற்சிகளை உடனே மேற்கொள்ளவேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## 200 மீனவக் குடும்பங்கள் பேசாலையிலிருந்து இடம்பெயர்வு

(மன்னார்)

பேசாலை சிறுதோப்பு பகுதியிலிருந்து 200 மீனவக் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

கடற்படையினரின் நெருக்குவாரங்கள் மற்றும் அச்சுறுத்தலையடுத்து மன்னார் நகரிலிருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வாங்காலை பகுதிக்கு அவர்கள் சென்றுள்ளனர். தங்களது பைபர் கிளாஸ் படகு, மீன்பிடி வலை உள்ளிட்ட மீன்பிடி தளபாடங்களுடன் வாங்காலைக்குச் சென்றுள்ளனர்.

கடந்த 25ஆண்டுகளுக்கு முன்பு வாங்காலை கிராமத்திலிந்து சிறுதோப்பு பகுதியில் இந்த மக்கள் குடியேறியிருந்தனர். கடந்த டிசம்பர் 23 ஆம் திகதி நடத்தப்பட்ட கடறபடையினர் மீதான தாக்குதலையடுத்து மீனவர்களை அச்சுறுத்துவதும் துன்புறுத்துவதுமான அட்டூழியங்களில் கடற்படையினர் ஈடுபட்டனர். இதையடுத்து அங்கிருந்து அனைத்துக் குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளனர். (த)

## ஜாதிக ஹெல உறுமயவுடன் ஜனாதிபதி மஹிந்த சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை அமைதி முயற்சிகளில் அமெரிக்கா, சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகளையும் ஈடுபடவைக்க கொழும்பு கொள்கை வகுப்பாளர் மூலம் தீவிரமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் ஜாதிக ஹெல உறுமயவினருடனான நீண்ட நேர சந்திப்பின் போது அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். சில நாட்களுக்கு முன்னர் அமெரிக்க தூதுவர் ஜெ.ஃப்ரி லுன்ஸ்டெட் வெளியிட்ட கருத்தை இக்கூட்டத் தில் மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

விடுதலைப் புலிகளை ஆதரிககாத மக்களின் பாதுகாப்பு குறித்து ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் கேள்வி எழுப்பினார். இது தொடர்பில் அரசாங்கமும், அமைதிச் செயலகமும் கவனத்தில் எடுத்துக்கொள்ளும் என்றார் மஹிந்த.

உள்ளாட்சித் தேர்தலை வடக்கு-கிழக்கில் நடத்துதல் தொடர்பாக பாதுகாப்பு அறிக்கைகளைத் தாக்கல் செய்யுமாறு ஆளுநர்களிடம் மஹிந்த ராஜபக்ஷ கோரியிருந்தார். ஆளுநர்களுடனான சந்திப்பின் போது வடக்கு-கிழக்கின் பிரதி பொலிஸ்மா அதிபர்களும் உடனிருந்தனர்.

ஆளுநர்கள் அலவி மௌலானா டிரோன் பெர்னாண்டோ, ரெஜி ரணதுங்க, திக்ரி பண்டாரா, ஜகத் பாலசூர்ய ஆகியோர் இச்சந்திப்பில் பங்கேற்றனர். (த)

## இராசிபலன்

**14.01.2006**
**(தை 1, சனிக்கிழமை)**
**பூரணை பிற்பகல் 3.44 மணிவரை**
**புநர்பூசம் முன்னிரவு10.07மணிவரை**
**இராகுகாலம் 9.34-11.04 மணிவரை**
**சுபநேரம் 3.34-5.04 மணிவரை**
**பூணை விரதம்**
**தைப்பொங்கல் திருநாள்**

| | |
|---|---|
| மேடம் | குடும்ப மகிழ்ச்சி, காரிய சித்தி, தெய்வ சிந்தை, பாராட்டு. |
| இடபம் | சுபசெலவு, காரிய தாமதம், உணர்ச்சி வசபபடல், போசன நன்மை. |
| மிதுனம் | தெய்வசிந்தை, உறவினர் வருகை, நல்ல முயற்சி, திடீர் நன்மை. |
| கடகம் | பிரயாணம், சுபகாரியம், அமைதிக்குறைவு, வேலைச்சுமை. |
| சிங்கம் | கீர்த்தி, குடும்ப மகிழ்ச்சி, தெய்வசிந்தை, காரிய அனுகூலம். |
| கன்னி | கலந்துரையாடல், ஆரோக்கியம், தொழில் முன்னேற்றம், நல்ல சம்பவம். |
| துலாம் | நிர்ப்பந்தநிலை, தொழில்சிந்தை, முயற்சி தாமதம், பணவிரயம். |
| விருச்சிகம் | எதிர்பாராத உதவி, தொழில்தடங்கல், அமைதிக்குறைவு, மாதர் நட்பு. |
| தனுசு | அதிக பிரயாசை, சுபநிகழ்வு, நல்ல வரவேற்பு, முயற்சி கைகூடும். |
| மகரம் | மேன்மை, புதியமுயற்சி, தெய்வ சிந்தை, விருந்துபசாரம். |
| கும்பம் | மனஸ்தாபம், பெரியோர் சந்திப்பு, காரிய தாமதம், சுபசெலவு. |
| மீனம் | புதிய முயற்சி, எதிர்பாராத நன்மை, தாய்வழி உறவு, கௌரவக்குறைவு. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
**- வளவன்**

## தொழிற்பயிற்சி வழங்கும் திட்டம்

(கொழும்பு)

உயா கல்வியைத் தொடரும் வாய்ப்பை இழந்த இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்கும் நாடளாவிய ரீதியிலான திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை அமுல்செய்வதற்காக பிரதேச செயலகங்கள் தோறும் ஒவ்வொரு ஆற்றல் அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கென தொழில் கல்வி பற்றி நன்கு பரிச்சயமான பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப் படவுள்ளதாக தொழிற்பயிற்சிக்குப் பொறுப்பான அமைச்சர் பியசேன கமகே தெரிவித்துள்ளார்.

தமது அமைச்சில் இதுவரை 3ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (த-7)

## அதிருப்தியாளர்களின் கோரிக்கையை ஏற்றார் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் அதிருப்தியாளர்கள் முன்வைத்த பல கோரிக்கைகளை கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது. இது தொடர்பில் அதிருப்தியாளர் குழுவின் தலைவர் ராஜித சேனாரத்ன தெரிவிக்கையில்,

கட்சியின் முடிவெடுக்கும் அதிகாரம் கொண்ட செயறகுழுவை ஜனநாயகப்படுததும வகையிலான பிரதி நிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற எமது கோரிக்கையை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்த அடிப்படையில் கட்சியின் தலைமை மற்றும் மாவட்டக் குழுக்களை நியமிக்க வேண்டும் என்ற கோரிகையையும் ரணில் ஏற்றுக்கொண்டுள்ளார். இருந்த போதும் கட்சியின் தலைமைப்பதவி தொடர்பில் இறுதி முடிவுஎதுவும் எடுக்கப்படவில்லை.

அதிருப்தியாளர்கள் முன்வைக்கின்ற கோரிக்கைகளை செயற்படுத்த கட்சித் தலைமை ஒப்புக்கொள்ளும் நிலையில் அரசின் பக்கம் செல்லுகின்ற சூழ்நிலை ஏற்படாது என்றார். (த)



தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டு பேரவையினால் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' ஆன்மீக சஞ்சிகை மார்கழி மாத இதழை வெளியீட்டு வைத்து பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா உரையாற்றுவதை படத்தில் காணலாம். (மருதங்கேணி செய்தியாளர்)

## திருமலை மக்கள் இடம்பெயர்வு

(திருகோணமலை)

திருகோணமலையிலிருந்து விடுதலைப் புலிகளின் பகுதிக்கு 1,000 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

திருமலை மகிந்தபுர சோதனைச் சாவடியூடாக இவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வெளியேறியுள்ளனர்.

கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஓலப்ஸ்டொட்டிர் இது குறித்துக் கூறுகையில், மூதூர் பகுதியிலிருந்து 1,000 குடும்பத்தினர் வெளியேறி அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள கிளிவெட்டி பாடசாலைகளில் தங்கியுள்ளனர். மேலும் மகிந்தபுரம் சோதனைச் சாவடியூடாக விடுதலைப் புலிகளின் பகுதிக்கு அவர்கள் சென்றுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றார். (த)



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்திற்கு சுமார் 30 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய மாடிக் கட்டடத்திறப்பு விழாவின் போது பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா, யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் ஆகியோர் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலனால் வரவேற்கப்படுவதையும், நல்லை ஆதீன குரு மகாசந்நிதானம் ஆசியுரை வழங்குவதையும் கட்டடத்தைத் திறந்துவைத்த அரச அதிபர் கணேஸ் நினைவுக்கல்லைத் திரை நீக்கம் செய்து வைத்திருப்பதையும் படத்தில் காணலாம். (படங்கள்:- பருத்தித்துறை நிருபர்)

## இன்று ஒரு தகவல்

# மனநிறைவு

ஒரு ராஜா இருந்தார். நாடு முழுவதும் நிறைய மரங்களை வளர்க்கவேண்டும் என்பது அவரது ஆசை. தானே அதற்கு முன் மாதிரியாக இருக்கவேண்டும் என்று நினைத்தார். அரண்மனையைச் சுற்றி நிறைய மரங்களை நட்டு வளர்த்தார். இதைப் பார்த்துவிட்டு மக்களும் தத்தம் வீட்டைச் சுற்றி மரக்கன்றுகளை நட்டு வளர்த்தார்கள். கொஞ்சக்காலத்தில் ஊர் முழுவதும் பசுமையாக மாறியது. எல்லோருக்கும் சந்தோஷமாக இருந்தது. இது ஒரு பக்கம் இருக்கட்டும். இப்போது நான் சொல்லப் போகும் கதை வேறு.

அதாவது... அந்த ராஜா ஒருநாள் தன்னுடைய அரண்மனையைச் சுற்றியிருக்கும் விதவிதமான மரங்களையெல்லாம் போய்ப் பார்த்தார். "எப்படியிருக்கிறீர்கள்?" என்று ஒவ்வொரு மரத்திடமும் விசாரித்தார். எந்த மரமும் சந்தோஷமாக இருப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வொன்றுக்கும் மனதில் குறை. முதலில் ஆலமரத்திடம் சென்றார்.

ஆலமரம் சொல்லியது "மன்னா... நான் நல்ல பெரிய மரமாக வளர்ந்திருக்கிறேன். அடர்த்தியாக இருக்கிறேன். கிளையெல் லாம் நான்கு பக்கமும் நன்றாகப் படர்ந்திருக்கிறது. இருந்தாலும் என்ன பிரயோசனம்? என்னுடைய பழம் மிகவும் சிறிதாக இருக் கிறதே... என் கண்ணுக்கே சரியாகப் புலப்படமாட்டேன் என்கிறதே... நான் இருக்கும் அளவிற்கு என் கிளையில் இருக்கும் பழம் எவ்வளவு பெரிதாக இருக்கவேண்டும். அது சிறியதாக இருப்பது எனக்குப் பெரிய அவமானமாக இருக்கிறது. இப்படி இங்கே நின்று கொண்டிருப்பதற்கே மிகவும் கூச்சமாக இருக்கிறது. ஒரு புயல் வந்தால் பேசாமல் சாய்ந்து விடலாமா என்று பார்க்கிறேன்" என்று புலம்பியது.

சரி இருக்கட்டும் என்று நினைத்துக் கொண்டு ராஜா அடுத்ததாக ஒரு அத்தி மரத்திடம் போனார். அதுவும் புலம்ப ஆரம்பித்துவிட்டது. "நான் கூட பெரிய மரம்தான்... இலை அழகாக இருக்கிறது... பழம் அழகாக இருக்கிறது... இருந்தாலும் உள்ளே விடயம் இல்லையே. 'அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்த்தால், அத்தனையும் சொத்தை' என்ற பழமொழியே உண்டாகிவிட் டதே... இப்படி ஒரு கெட்ட பெயருடன் நான் இருக்கவேண்டுமா?" என்றது. சரி இது இருக்கட்டும் என்று அடுத்ததாக வேப்ப மரத்திடம் போனார். அது தன்னுடைய வேதனையை வெளி யிட்டது.

"எனக்கு எவ்வளவோ மருத்துவ குணங்கள் எல்லாம் இருப்பதாகச் சொல்கிறார்கள்...இருந்தாலும் என்ன பிரயோசனம்... என்னுடைய பழத்தை மனிதர்கள் விரும்பிச் சாப்பிடுவதில்லையே" என்றது. ராஜா...அடுத்ததாக இருந்த ஒரு பனை மரத்திடம் போனார். "நான் நல்ல உயரமாகத்தான் வளர்ந்திருக்கிறேன். மற்ற மரங்கள் எல்லாம் என்னை அண்ணாந்துதான் பார்க்க வேண்டும். இருந்தாலும் என்னிடம் யாரும் நிழலுக்காக வந்து ஒதுங்குவதில்லையே"என்றது.

என்ன இது எல்லா மரமும் இப்படி திருப்தி இல்லாமல் இருக்கின்றனவே...என்று நினைத்துக்கொண்டே ராஜா அடுத்தபடியாக அங்கேயிருந்த பைன் மரத்திடம் போனார். அழகாக உயரமாக பசுமையாகத்தான் இருந்தது. ஆனால் பழமோ,பூவோ,காயோ கிடையாது. அதை நினைத்து அந்த மரம் வருத்தப்பட்டது. 'ஒக்' மரம் ஒன்று நின்று கொண்டிருந்தது. அது என்ன சொல்லியதென்றால் "இலையுதிர் காலத்தில் என் மீதிருக்கும் எல்லா இலைகளும் உதிர்ந்து போகின்றன. முடி கொட்டிய மனிதர்கள் மாதிரி நான் மொட்டையாக நிற்க வேண்டியிருக்கிறது" என்று கூறி அலுத்துக் கொண்டது.

சரி... புளியமரம் என்ன சொல்கிறது பார்ப்போம் என்று அதனிடம் போனார். "என்னுடைய நிழலில் யாரும் தங்கமாட்டார்கள். உடம்பிற்கு சூடு என்று ஒதுங்கிப் போய்விடுவார்கள். அடிமரத்தைப் பார்த்தீர்கள் என்றால் பட்டையெல்லாம் உரிந்து பார்ப்பதற்கே கேவலமாக இருப்பேன்" என்றது. முருங்கை மரம் என்ன சொல்லியது தெரியுமா? "என்னுடைய இலை... காய் எல்லாம் சப்பிடுபவர்களுக்குச் சத்துக் கொடுப்பதுதான். ஆனால் எனது உடம்பில் சத்தே இல்லை. வேகமாகக் கர்றறடித்தால் முறிந்து விழுந்துவிடுவேன் என்ன வாழ்க்கை இது?" என்று கூறிவருத் தப்பட்டது.

ராஜா யோசித்தார்... என்ன இது... மரங்கள் பூமியின் வரங்கள் என்று சொல்கிறோம். மழை பெய்வதற்கே அதுதான் காரணம். பூமி செழிப்பாக இருப்பதற்கும் அதுதான் காரணம். வீடு கட்ட, மரம் நாற்காலி செய்ய உபயோகப்படுகிறது. மனிதனுக்கு வேண்டிய ஆகாரங்களையும் கொடுக்கிறது. அப்படியெல்லாம் இருந்தும் எல்லா மரமும் நிம்மதி இல்லாமல் இருந்து கொண்டி ருக்கிறதே என்று நினைத்தார்.

அப்போது அங்கேயிருந்த ஒரு மகிழ மரம் அவரது கண்ணில் பட்டது.அந்த மரம் மட்டும் நிம்மதியாக, மகிழ்ச்சியாக இருப்பது போல் தெரிந்தது. உடனே ராஜா அதனிடம் போனார். "உனக்கு மனதில் ஏதும் குறை இல்லையா?" என்று கேட்டார். "இல்லை... நான் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன்" என்றது மகிழமரம். "அப்படியா?"என்று ஆச்சரியமாகக் கேட்டார் ராஜா. "ஆமாம் மன்னா... இந்த இடத்தில் நீங்கள் ஒரு முருங்க மரத்தையோ வேப்பமரத்தையோ கூட நட்டிருக்கலாம். ஆனால் இந்த இடத்தில் நடுவதற்கு என்னைத் தேர்ந்தெடுத்தீர்களே... அதுவே எனக்குப் பெருமை. அதுவே எனக்குத் திருப்தி" என்றது மகிழமரம்.

மகிழமரம் சாதாரணமாகத்தான் இருக்கும். இளம் மஞ்சள் நிறத்தில் பூக்கள் மணம் வீசும். மகிழமரம் மாதிரி மனத் திருப்தியுடன் வாழ நாம் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் இந்த உலகத்தில் ஒரு நாயாகவோ நரியாகவோ கூடப் பிறந்திருக்கலாம். மனிதனாகப் பிறந்திருக்கிறோம். அதுவே பெருமையல் லவா? இந்த நிறைவுதான் மகிழ்ச்சியின் இரகசியம்.

ஒரு பையன் அப்பாவிடம் போய் " அப்பா நீங்கள் இந்த உலகத்தில் ஒரு மனிதனாகப் பிறந்தது என்து அதிர்ஷ்டம்" என்றான். "ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்றார் அப்பா. "நீங்கள் ஒரு கரடியாகப் பிறந்திருந்தால் இந் நேரம் நானும் ஒரு கரடிக் குட்டியாகத் தானே இருந்திருப்பேன்"என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# 53 உள்ளூராட்சி அமைப்புக்களுக்காக புதிய வேட்புமனுக்கள் கோர தீர்மானம்

## அரசியல் யாப்புக்கு அமைவானதா? நீதிமன்றத்திடம் மஹிந்த விளக்கம் கோருகிறார்

(கொழும்பு)

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு-கிழக்கின் 53 உள்ளூராட்சி அமைப்புக்களுக்கான புதிய வேட்பு மனுக்களைக் கோருவது என்ற தீர்மானம் அரசியல் யாப்புக்கு அமைவானதா என உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இத் தீர்மானம் சரியானது தானா என்பதை அறிவிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ உயர்நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமைச்சரவை சமீபத்தில் அங்கீகரித்த உள்ளூராட்சி மன்ற விசேட ஏற்பாடுகள் வரைவு சட்ட மூலத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்த ஜனாதிபதி இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

வடக்கு-கிழக்கின் உள்ளூராட்சி மன்றங்களுக்காக 2002ஆம் ஆண்டில் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அவ்வருடத்தில் நடைபெறவிருந்த தேர்தல் பிற்போடப்பட்டது. இடைப்பட்ட காலப்பகுதியில் 22 வேட்பாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

எனவே பழைய வேட்பு மனுக்களை எதிர்வரும் தேர்தலுக்காக பயன்படுத்துவது பொருத்தமானது அல்ல என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது. தற்போதைய உள்ளூராட்சி மன்ற சட்டத்தில் இதற்கான ஏற்பாடுகள் இல்லாத காரணத்தால் உள்ளூராட்சி மன்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. (க-4)

# சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பில் அரசின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை

## -அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா



(கொழும்பு)

இராணுவத்தினர் தற்பாதுகாப்புக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்த ஜனாதிபது மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பில் சிறிலங்கா அமைச்சரவைப் பேச்சாளர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தை நடத்த அரசாங்கம் விரும்பவில்லை. இருப்பினும் விடுதலைப் புலிகளின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளின் போது தற்பாதுகாப்புக்காகத் தாக்குதலை நடத்தவும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்று நடக்கவும் இராணுவத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்ற பின்னர் 80க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்ட நிலையிலும் யுத்தநிறுத்த ஒப்பந்தம் தொடர்பிலும் பேச்சுக்கள் தொடர்பிலும் அரசாங்கத்தின் நிலையில் மாற்றமில்லை. நாம் யுத்த நிறுத்தத்தில் ஈடுபாட்டோடு இருககிறோம் என்று சர்வதேச சமூகத்துக்கு நிருபித்து வருகிறோம். இதையே விடுதலைப் புலிகளும் மேற்கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகள் போன்ற கெரில்லா அமைப்புகளின் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் எதிர்வினையாற்றாது. நாங்கள் பொறுமையாக இருந்ததன் விளைவாக அமெரிக்காவும், அவுஸ்திரேலியாவும் விடுதலைப் புலிகளை எச்சரித்துள்ளன. அண்மையில் இணைத்தலைமை நாடுகளன் பிரதிநிதிகளுடனான மஹிந்த ராஜபக்ஷவின் சந்திப்பின் போது கூட அரசாங்கத்தின் பொறுமையை அவர்கள் பாராட்டினார்கள்.

நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவினர் எதிர்த்த போதும் நாம் வரவேற்கிறோம். கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவருடனான அவரது சநதிப்புக்குப் பின்னர் அமைதிப் பேச்சுக்கள் தொடங்கக கூடும் என்று நம்புகிறோம்.

தென்னிலங்கைக் கட்சிகளின் இணக்கப்பாடு என்பதில் அனைத்துக் கட்சிகளும் போரை விரும்பவில்லை என்பதுதான் தற்போதைய முன்னேற்றகரமான நிலைமை என்றார். (த)

# ஐ.தே.கவின் பிரதித் தலைவருக்கு கூடுதல் அதிகாரங்கள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாக நடவடிக்கைகள்,செயற்பாட்டு நடவடிக்கைகள், தீர்மானங்களை செயற்படுத்தும் நடவடிக்கைகளின் அதிகாரங்களை கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவிடம் வழங்குவதற்கு புதிய மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அக் கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

புதிய மறுசீரமைப்பின் கீழ் 1500 உறுப்பினர்களைக் கொண்ட நிறைவேற்று சபையை நிறுவவும், செயற்குழுவில் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்திற்கு உட்பட்டு அரசியல் சபையின் அதிகாரத்தை விரிவுபடுத்தவும, அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், அவர்களைத் தெரிவு செய்யும் முறையை மறுசீரமைக்கவும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் சபைக்கு, உத்தியோகபூர்வ அதிகாரங்களுடன் 4 பேரையும் மேலதிகமாக 8பேரையும் நியமிக்கவேண்டும் என்றும் அதற்கென புதிய திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கட்சியின் பாராளுமன்றக் குழுவின் நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட வேண்டும், மாவட்ட அமைப்பாளர்கள் பலப்படுத்தப்பட வேண்டும், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் செயற்பாட்டு ரீதியான பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கட்சியின் நடவடிக்கைகளை சக்திமிக்கதாக்குவதற்காக ஒவ்வொரு மாதமும் மாகாண மற்றும் உளளூராட்சி மன்ற உறுப்பினர்களின் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் ஆகிய யோசனைகள் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக முன்வைக்கப்பட்டுள்ளன.(த)

# ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நாடு எதிர்நோக்கும் சவால் என்ன?

(கொழும்பு)

"ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நாடு எதிர் நோக்கும் சவால் என்ன?" என்ற தொனிப் பொருளில் பொதுக் கூட்டங்களை நடத்த ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

இதற்கமைய நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் அனைத்துப் பிரதான நகரங்களிலும் இப் பொதுக்கூட்டங்கள் இடம்பெறவுள்ளன.

முதலாவது கூட்டம் ஜே.வி.பி பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தலைமையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு காலி நகர மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இரண்டாவது கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை மகரகம இளைஞர் சேவை மன்றத்தில் பி.ப 3.00 மணிக்கு ஜே.வி.பி பிரசார செயலாளா விமல்வீரவன்ச தலைமையில் இடம்பெறவுள்ளது.

மூன்றாவது கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு கண்டி தபால் நிலைய கட்டடத் தொகுதி கேட்போர் கூடத்தில் விமல் வீரவன்ச தலைமையில் நடைபெறவுள்ளது. (க-9)

# மட்டக்களப்பில் 20ஆம் திகதி தமிழ்த் தேசிய எழுச்சிப் பேரணி

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மட்டக்களப்பு மாவட்ட அம்பிளாந்துறைப் பகுதியில் எதிர்வரும் 20ஆம்திகதி தமிழ்த் தேசிய எழுச்சிப் பேரணியை நடாத்த மாவட்ட வெகுசன அமைப்புக்கள் ஏற்பாடு செய்து வருகின்றன.

எதிர்வரும் 20ஆம் திகதி பிற்பகல் 3மணிக்கு அம்பிளாந்துறை பொதுவிளையாட்டு அரங்கில் நடைபெறும் இந்த எழுச்சி நிகழ்வில் பல்லாயிரக் கணக்கான மக்கள் அணிதிரண்டு உணர்வு ரீதியாக தமது உரிமைக் குரலை உலகறியச் செய்ய வேண்டுமென ஏற்பாட்டுக் குழுவினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் குரல்வளையினை இனவாதிகள் நெருக்கமுறபடும் இந்த வேளையில் உலகிற்கு எமது எழுச்சியினையும்,எமது நிலையினையும் தெரிவிக்கும் இறுதிச்சந்தர்ப்பம் இது. இத்தகைய நிலையிலேயே தமிழர் தாயகப் பிரதேசங்கள் எங்கும் தமிழ் மககளின் உணர்வெழுச்சியையும், அவர்களின் உரிமைக குரலையும் உலகின் காதுகளில் இறுதியாகவும், உறுதியாகவும் உரத்துக் கூறவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)


# தைப்பொங்கல் சிறப்பிதழ் – 2006

அனைவருக்கும் தைப் பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

புத்தம் புதிய துவிச்சக்கர வண்டிகள் T.V., டெக் வகைகள், ரேடியோ வகைகள்

அவற்றிற்கான உதிரிப்பாகங்கள், அன்ரனா வகைகள் போன்றவற்றை

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள



## இ.ச.பேரம்பலம் சகி நிறுவனம்

## E.S.PERAMPALAM AND CO.

இல: 50,52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(PEPSI, MIRINDA, 7UP
போன்றவற்றிற்கான ஏகவிநியோகஸ்தர்கள்)

T.P:021- 222 2988, 3096 Fax: 021-222 2368

---

அன்பர்கள் நண்பர்கள் ஆதரவாளர்கள்
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

## கஜமுகன் ஹாட் வெயர்ஸ்

யாழ்.ஏகவிநியோகஸ்தர்கள்

147,149,STANLEY ROAD, JAFFNA.




---

பொங்கல் திருநாளில் அனைவர் வாழ்விலும்
இன்பம் பொங்க வாழ்த்துவோர்

இதோ 171 ஸ்ரான்லி வீதியில்

உங்களது நன்மதிப்புப் பெற்ற
பிரீடம் எல்.எம்.எல். ஸ்கூட்டர்
மோட்டார் சைக்கிள், விவசாய உபகரணங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள புதிய நிறுவனம்



## S.P.N.MOTORS

## எஸ்.பீ.என்.மோட்டர்ஸ்

171 , ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

---

மக்கள் மனதில் சாந்தியும் சமாதானமும் பொங்கிப் பெருக,
இத்தைப்பொங்கல் திருநாள் வழிவகுக்கட்டும்



கொமர்ஷல் வங்கி

உங்கள் நலமே எங்கள் நோக்கம்

# ஏமாற்றிவிட்ட 2005

## ஓகஸ்ட்

### வலம்புரி நினைவுக் குறிப்பு



02.08.2005 *மட்டக்களப்பில் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு.



04.08.2005 *இணுவிலில் இராணுவச் சிப்பாயின் துப்பாக்கிச் சூட்டில் சிகை அலங்கரிப்பு நிலையத்தில் கடமை புரிந்த இளைஞன் பலி. இராணுவத்தினர் - பொதுமக்களிடையே பெரும் முறுகல் நிலை. யாழ். பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தன கடத்தப்பட்டு கொலை.

05.08.2005 *யாழ். குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்.

*விடார் ஹெல்கிஸன் இலங்கை வருகை. கிளிநொச்சியில் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.

06.08.2005 *இணுவில் சம்பவங்களை விசாரிப்பதற்கென பொலிஸ்மா அதிபர் தலைமையிலான உயர் அதிகாரிகள் குழு யாழ்.வருகை.

*விடார் ஹெல்கிஸன் - எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சந்திப்பு.

07.08.2005 *திருமலையில் உள்ள ஜே.வி.பியின் அலுவலகம் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்.

08.08.2005 *வவுனியாவிலும் திருமலையிலும் இணுவில் சம்பவத்தைக் கண்டித்து ஹர்த்தால்.

10.08.2005 *அம்பாறையில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் இருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை.

12.08.2005 *வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டுக்கொலை.

*அறிவிப்பாளர் ரேலங்கி அவரது கணவர் செல்வராஜா ஆகியோர் சுட்டுக்கொலை.

14.08.2005 *நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன்- அன்ரன் பாலசிங்கம் லண்டனில் சந்திப்பு.

15.08.2005 *இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முஹர்ஜி ஆகியோர் கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகாவுடன் சந்திப்பு.

16.08.2005 *ரணில் விக்கிரமசிங்க இந்தியா பயணம்.

17.08.2005 *இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஐ.கே.குஜ்ராலுடன் ரணில் விக்கிரமசிங்க சந்திப்பு.

* அன்ரன் பாலசிங்கம்- விடார் ஹெல்கிசன் ஜோன் பீற்றர்சென் லண்டனில் சந்திப்பு.

18.08.2005 *கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.

22.08.2005 *வெளிவிவகார அமைச்சராக அநுரா பண்டாரநாயக்க பதவியேற்பு.







30.08.2005 *சந்திரிகாவுடன் விசேட ஆலோசகர் மனோதித்த வெல யாழ்.வருகை.

*அமெரிக்க இராஜாங்க அமைச்சின் உயர் அதிகாரிகள் குழு யாழ்.வருகை.

### உலக அரங்கில்

01.08.2005 *சவூதி அரேபிய மன்னர் அப்துல் அஜிஸ் மரணம்.

22.08.2005 *காஸா பள்ளத்தாக்கிலிருந்து யூதக் குடியேற்றவாசிகள் வெளியேற்றம்.

25.08.2005 *புளோரிடாவில் புயல். 10 ஆயிரம் பேர் உயிரிழப்பு.

31.08.2005 *சியாத் மதப்பிரிவின் சடங்கு ஒன்றில் சன நெரிசலில் சிக்கி 700 பேர் பலி.

(தொடரும்...)

# தமிழர் தாயகத்தில் அபிவிருத்திப் பணிகளை புறக்கணிக்கின்றது இலங்கை அரசாங்கம்

## கேணல் சூசை குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

தென்னிலங்கையில் அபிவிருத்திப் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்படும் நிலையில் இலங்கை அரசினால் தமிழர் தாயகப் பகுதி தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்று கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை குற்றம்சாட்டியுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற லோகீசனின் ''அலையின் வடுக்கள்'' நூல் அறிமுக நிகழ்வில் கலந்துகொரண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நீண்டகால போராட்ட வரலாற்றில் சந்தித்திராத துன்ப துயரமான நிகழ்வாக ஆழிப்பேரலை நிகழ்வை முல்லைத்தீவில் சந்தித்தோம்.

முல்லைத்தீவு மற்றும் தமிழர் தாயகப் பகுதி உட்பட உலகில் பல பகுதிகளிலும் ஆழிப்பேரலை இலட்சக்கணக்கான மக்களின் உயிர்களை காவுகொண்டு விட்டது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட நாடுகளில் மீட்புப்பணிக்கு விமானங்கள், உலங்கு வானூர்திகள், கப்பல்கள் மூலம் எல்லா உதவிகளும் வந்துசோந்து கொண்டிருந்தது.

ஆனால் எங்களிடம் இருந்த வளத்தை வைத்துக்கொண்டு மக்களுடைய ஆதரவோடு மீட்புப்பணியை முன்னெடுத்தோம்.

மக்களை மீளக்கட்டியெழுப்புவதற்கும் இப்படியொரு அவலத்தை எப்படி மக்கள் சந்தித்தார்கள்- சந்தித்தபோது அவர்கள் பட்ட துயரங்கள் - தாங்க முடியாத துன்ப சுமைகள் ஆகியவற்றைப் படங்களாகவும், எழுத்து மூலமாகவும் புத்தக வடிவமாக்கி எங்கெல்லாம் தமிழ் மக்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் இந்த அவலத்தை வெளிக்கொண்டுவந்தமைக்காக லோகீசனுக்கு எனது பாராட்டைத் தெரிவிக்கின்றேன்.

பல இடங்களில் இன்று இயற்கையின் சீற்றம் ஏற்படுகிறபோதெல்லாம அவர்கள் பட்ட அவலங்களை விடவும் மிகவும் வளமில்லாத நிலையிலும் எங்கள் வளத்தை வைத்து மீட்டெடுத்த அந்தப் பெருமை நிகழ்வை உலகறியச் செய்து தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு சம்பந்தமாகவும் அவர்களுடைய திட்டமிடல் நடவடிக்கைகளை எவ்வாறு செயற்படுத்தினார்கள் என்பதை உலகத்திற்கு எடுத்துக்கூறிய லோகீசனுடைய எழுத்தாற்றலுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நடந்து முடிந்த தேர்தலில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அங்கு மேற்கொள்ளுகின்ற எந்தவொரு அபிவிருத்திப் பணிகளும இடையூறில்லாமல் தொடர்கின்றன.



ஆனால் தமிழர் தாயகத்தில் எந்தவித மாற்றங்களும் இடம்பெறவில்லை. இராணுவ அரசியல் ரீதியாக இந்தப் பகுதியும் தென்பகுதியும் வெவ்வேறு கண்ணோட்டத்தில் பார்க்கப்பட்டு பெரும் அவலத்தில் சிக்கியுள்ள அந்த மக்களின் அவலவாழ்வு தொடர்கிறது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஊடாக புலம்பெயர்ந்த உறவுகள் வழங்கிவரும் உதவிகளால்தான் நாம் மக்களுக்கு உதவி வருகிறோம் என்றார். (க-4)

# சிறுபான்மை கட்சிகள்— ஜனாதிபதியால் புறக்கணிப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நடாத்தப்பட்ட சமாதான முயற்சிகள் தொடர்பான கலந்துரையாடலுக்கு இலங்கை முஸ்லிம் காங்கிரஸ"க்கு அழைப்பு விடுவிக்காமை குறித்து அதன் தலைவர் ரவூவ் ஹக்கீம் தமது அதிருப்தியை தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளை மேற்கொள்ளும் பொருட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடலுக்கு சமுகமளிக்குமாறு கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி நடாத்திய இக்கலந்துரையாடலுக்கு தமிழத் தேசிய கூட்டமைப்பு, இலங்கை முஸ்லீம் காங்கிரஸ், மேல் மாகாண மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

இது சிறுபான்மை கட்சிகளின் கருத்துக்களை புறக்கணிக்கும் நடவடிக்கையே என கருதப்படுகின்றது.

இதுபற்றி அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வாவிடம் வினாவியபோது இது குறித்து தமக்கு எதுவும் தெரியாது என பதிலளித்திருந்தார்.

இது ஜனநாயக மரபுக்கு முரணானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(க-2)

# இக்கட்டான நிலையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம்

## ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தையினை நடாத்துவதற்கான இடத்தினைத் தெரிவுசெய்யும் விடயத்தில் எவ்வித முடிவும் காணப்படாமல் காலம் வீணாக விரயமாக்கப்படுவதாக ஐரோப்பிய ஆணைக்குழுவின் சர்வதேச தொடர்பாளர் வெலிக்ரா வரவோலடடினா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்குகின்ற ஏனைய அரசியல் கட்சிகளும் விடுதலைப் புலிகளும் இணக்கப்பாடொன்றுக்கு வரவேண்டும்.

சமாதானத்தினை முன்னெடுத்துச் செல்ல இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கு சந்தர்ப்பங்கள் அதிகமாக இருக்கின்றன. அதனை அவர்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-4)

# தைப்பொங்கல் சிறப்பிதழ் – 2006

அனைவருக்கும் எங்களது பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

## கிருஷ்ணா அடைவு கடை

## KRISHNA POWN BROKER

870, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 5046 370, K.K.S. Road, Jaffna.

---

அனைவருக்கும் எங்களது பொங்கல் நல் வாழ்த்துக்கள்!



## வேணி நகை மாடம்

## Veneiy Jewellery

தங்கப் பவுண் நகை வியாபாரம்

MANUFACTURERS OF GOLD JEWELS




இல: 40, கன்னாதிட்டி வீதி,
(மக்கள் வங்கிக் கிளை முன்பாக)
யாழ்ப்பாணம்.

No: 40, Kannathiddy Road,
(People Bank Opposite) Jaffna.

---

## TILKO HOLIDAYS (PVT) LTD



### எம்மிடம்

- நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட விசாலமான அறைகள்
- Hot, Cool Water குளியலறைகள்
- சிறுவர்கள் மகிழ்ச்சியுற Swiming pool வசதி
- கீழைத்தேச, மேலைத்தேச சுவைமிக்க உணவுகள், கடல் உணவுகளும் உடனுக்குடன் தயாரித்துப் பரிமாற்றப்படும்.
- தங்கியிருப்போர் மனதைக் கவரும் வகையில் அமைந்துள்ள புற்தரைகள், பூந்தோட்டம், வட்டக் குடில்களும்
- சுற்றுலாப் பயணிகளுக்கான வாகன வசதிகளும்
- இவற்றுடன் பயிற்றப்பட்ட எமது பணியாளர்களின் கனிவான பராமரிப்பும், இன்முகத்துடன் கூடிய சேவைகளும்.

**இவற்றைப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்**

TILKO HOLIDAY'S (PVT) LTD
HOTELS AND GUEST HOUSES
JAFFNA CITY HOTEL.
NO. 70/6, K.K.S. ROAD,
JAFFNA.
Tel :.021 222 5969 Fax: 021 222 7291
E-mail: tilkoholidays @ yahoo.com
Web: www.tilkoholidays.com

BRANCHES:
BOUGAIN VILLA GUEST HOUSE
305, Main Street, Jaffna.
PALM VILLA GUEST HOUSE
114, Kandy Road, Jaffna.
MOUNT LA VILLA
65, Sangamitta Avenue,
Mt.Lavinia.
Tel: 011 2713803, 011 4216428
SANDIYA VILLA
Lower Road,
Trincomalee.







LONDON OFFICE:
213, HIGH STREET NORTH,
EAST HAM LONDON E6 1jG
Tel: (++44) 020 8472 0029
Fax: (++44) 020 8503 5996
Mobile: (++44) (0)7957400 777.

---

அனைவருக்கும் எமது உளம் கனிந்த தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

பலசரக்குப் பொருட்கள், மிக்ஷர் தயாரிப்பிற்கான பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

## ஜெகன் களஞ்சியம்

இல.285, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் T.P: 021 222 5035

---

- உங்களுக்கு வேண்டிய அழகிய அசல் தங்க நகைகளை விருப்பத்திற்கேற்ற டிசைன்களில் வடிவமைத்துத் தருபவர்கள்
- ஓடர் நகைகள் உடனுக்குடன் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

## துர்க்கா நகைப் பூங்கா



71, கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் T.P: 021 222 2228

---

அன்பர்கள், நண்பர்கள், வடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது தைத்திருநாள் வாழ்த்துக்கள்!

புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்களா? அவற்றிற்கான உதிரிப்பாகங்களா? மோட்டார் வாகனங்களா? பற்றரி வகைகளா? அனைத்தையும் ஓரிடத்தில் நிதான விலையில் பெற்றிட

## அருள் விநாயகர் மோட்டோர்ஸ்



இல. 108, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
மெயின் வீதி, சங்கானை

## அருள் விநாயகர் ரேடர்ஸ்

இல. 106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

---

அனைவருக்கும் எமது இதயம் கனிந்த பொங்கல் நல் வாழ்த்துக்கள்!



## சிறிமாரி நகை மாடம்

(தங்க வைர நகை வியாபாரம்)

ஓடர் நகைகள் குறித்த தவணையில் 22 கரட் தங்கத்தில் செய்து கொடுக்கப்படும்.

இல 49, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகாமை) T.P: 021 222 7164

---

## தமிழ்த் திருநாளாம் தையே வருக!

தமிழ்த் திருநாளாம் தையே வருக
தமிழின் சுவைபோற் தனிச்சுவை தருக
தமிழர் தரணியிற் தலைநிமிர்ந்திடவே
தக்க நற்பணிகள் தழைத்திடச் செய்க!

நன்நாள் பொங்கல் நற்பெரும் திருநாள்
சொன்னால் இனிக்கும் சுவை நாளென்று
பொன்நாளாகப் போற்றிடுகின்றார்
இந்நாள் தமிழர்க்கு ஏற்றந்தருக!

உலகைக் காக்கும் உழவன் வாழ்வில்
உதவிடும் ஞாயிறும் உழுகாளைகளும்
உள்ளம் பொங்க உயர்வுறு மிந்நாள்
உயர்ந்த நற்தமிழர் தனிப்பெருநாளே!

நீர்வைமணி.

# புதிய வாழ்வுக்கு அத்திபாரமிடும் தைப்பொங்கல் திருநாள்

இன்று தைப்பொங்கல் திருநாள் இது தமிழர்களின் பெருநாள் நெல்வயல்களையெல்லாம் பொன்



விளையும் பூமியாக்கி, நெற்கதிர்கள் யாவும் நல்லமுறையில் முற்றி நெல்மணியாக விளைந்து எமக்கெல்லாம் அரிசி கிடைப்பதற்கு வழிசமைத்த சூரிய பகவானுக்கு நன்றி செலுத்துமுகமாக இந்தத் தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது.

தைமகளை வரவேற்கும் வகையில் சூரியபகவான் தனது பொற்கிரணங்களை புவிமீது பரப்ப ஆரம்பிக்கும் அதிகாலையிலே புண்ணிய நீராடி, வாசலை மெழுகிக் கோலமிட்டு, வாழை, கமுகு, தோரணங்களால் அலங்கரித்து மாவிலையும் தூக்கி புதிய அடுப்புவைத்து புதுப்பாணையிலே பொங்கல் பொங்கப்படும்.

"புத்தரிசிப் பொங்கல்" 'பொங்கலோ பொங்கல்' என்று கோஷமிட்டு அடுப்பினின்றும் இறக்கி வைத்து எல்லாம்வல்ல சூரியபகவானுக்குப் படைத்து திருமுறைப் பாராயணம் செய்து பால், பழம், கறியமுது, பலகாரவகைகள் முதலானவற்றையும் நிவேதித்து அவரை நன்றிக்கடன் உணர்வோடு வணங்குவதே இன்றைய பணியாகும்.

'தை பிறந்தால் வழிபிறக்கும்' என்பார்கள் புதிய மாதம் பிறக்கும் நாளில் எமது துன்பமெல்லாம் பறந்தோடிவிட வேண்டும் என்ற நம்பிக்கைக் கீற்றுடன் முகம்மலர சூரியனை வழிபடுதல் தக்கது.

தேவர்களுக்கு ஆடிமாதம் முதல் மார்கழி மாதம் முடிய இரவும் தை முதல் ஆடிவரை பகலுமாக ஒரு நாளாகும். ஆகவே தேவர்களுக்கு இது பகல் ஆரம்பிக்கும் காலமாகும்.

இந்தத் தைமாதம் தமிழர்கள் எல்லோருக்கும் வாழ்வளிக்கும் மாதமாகும்.

அதாவது தொழில் துறைகள் குறைந்த வருமானம் குன்றியிருக்கும் வேளையில் இத் தைமகள் தான் கைகொடுப்பாள். தை பிறந்தவுடன் பலரும் பல்வேறு முயற்சிகளையும் பலவித தொழில்களையும் ஆரம்பிப்பர். அதனால் வேலையின்றிக் கஷ்டப்பட்ட பலரும் நன்மையடைவார்கள்.

**சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்**

வாழ்க்கையில் இதுகாலும் பட்ட துன்பங்களும் துயரங்களும் இனியாவது சூரியனைக்கண்ட பனி போல மறைந்துபோக வேண்டும் என்று வேண்டுதல் செய்யும் திருநாளே தைப்பொங்கல் நன்னாள்.

எனவே இன்றைய நன்னாளில் ஆலய தரிசனஞ்செய்து, சூரியனுக்குப் பொங்கிப்படைத்து வழிபாடியற்றி உறவினர்களுடன் சந்தோஷங்கொண்டாடி மகிழ்ச்சி ஆரவாரத்துடன் தைமகளை வரவேற்று எமது புதிய நல்வாழ்வுக்கு அத்திபாரமிட்டு, நிலமகளை வணங்கி வாழ்த்தி புதிய உத்வேகத்துடன் உழைப்போமாக. □

# தமிழ் மக்களுக்கு நிம்மதியுடன் கூடிய மகிழ்ச்சியும் விடிவும் கிடைக்க வேண்டும்

## அகில இலங்கை இந்துமாமன்றத்தின் பொங்கல் வாழ்த்துச்செய்தி

(யாழ்ப்பாணம்)

"தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது எமது மூதாதையோர் கூற்று துரதிர்ஸ்டவசமாக நாங்கள் இந்த தைப்பொங்கல் தினத்தை நம்பிக்கையுடன் அனுட்டிக்க முடியாத நிலையில் இருக்கின்றோம். எனவே எங்கள் மக்களின் விமோசனத்திற்காக ஆண்டவனை வழிபடுவதே ஒரேயொரு வழியாகும் என்று அகில இலங்கை இந்துமாமன்றம் விடுத்துள்ள தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும், தைப்பொங்கலன்று ஒளிதருகின்ற தெய்வீகத்தின் வடிமாக சூரியபகவான் தங்கள் வயல்களில் விளைச்சல்களுக்குத் தந்த சக்தியைப் போற்றி நன்றி தெரிவித்து பொங்கல் படைத்து வணங்குவது மரபு. இறைவனை மறவாது அவனது தெய்வீக அருளை வேண்டி வணங்கும் புனித நாள் பொங்கல் திருநாள்.

தமிழர் திருநாள் என்று போற்றப்படும் பெருநாள் இது. ஆனால் தமிழ் மக்கள் மனவேதனையடைந்திருக்கும் நிலையில் இந்நாள் பிறக்கிறது. இந்நாட்டில் வாழும் இந்து மக்கள் தைப்பொங்கலின் புனிதத்தை உணர்ந்து மதித்து இதனை ஒரு வழிபாட்டு நாளாக அனுஷ்டிக்க வேண்டும்.

தைப்பொங்கலன்று நமது மக்கள் கொண்டாட்டங்கள் களியாட்டங்கள் என குதூகலிக்க முடியாது. தமிழ் மக்களின் நிலை இன்று மிகவும் வேதனைக்குரிய கட்டத்தில் இருக்கின்றது. இந்நிலையில் எமது மக்களின் விமோசனத்திற்காக நாங்கள் ஒவ்வொருவரும் தைப் பொங்கல் தினத்தன்று பிரார்த்தனையில் ஈடுபடவேண்டும்.

தமிழ் மக்கள் கண்மூடித்தனமாகக் கைதுசெய்யப்படுவது, தமிழ் மக்களைக் கொலை, கற்பழிப்புப் போன்ற பாரிய தாக்குதல்களுக்கு இராணுவ சக்தி மூலம் ஆட்படுத்துவது என்ற இன்றைய நிலை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் இளம் சமுதாயத்தினரின் கல்வி நிலை மீண்டும் கவலைக்கிடமான முறையில் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கப்போகின்றன.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் உரிய முறையில் முழுமையாக அமுல் படுத்தப்படவேண்டும். உடனடியாகவே சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவேண்டும், சகல இராணுவ நடவடிக்கைகளும் உடனடியாக நிறுத்த ஜனாதிபதி கட்டளையிடவேண்டும் என்று தைப் பொங்கல் தினத்தில் பகிரங்கமான வேண்டுகோளை விடுக்கின்றோம்.

இதேவேளை மாமன்றத் தலைவருக்கும் பொதுச் செயலாளருக்கும் ஜனாதிபதி 15ஆம் திகதி நடாத்தவுள்ள தைப்பொங்கல் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு வந்திருக்கிறது. இந்நிலையில் அப்படியான கொண்டாட்டத்தில் நாங்கள் பங்கேற்க முடியாது என்பதனை ஜனாதிபதிக்கு அறிவித்திருப்பதுடன் தைப் பொங்கலைக் கொண்டாடுவதிலும் பார்க்க தமிழ் மக்களுக்கு விமோசனம் வழங்குவதே முக்கியம் என்பதனை வலியுறுத்தியிருக்கிறோம். எமது மக்களுக்கு கூடிய விரைவில் நிம்மதியும் சுபீட்சமும் மகிழ்ச்சியும் விடிவும் கிடைக்கவேண்டும் என இறைவன் அருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம் என்றுள்ளது. (க)

# உலக பத்திரிகை சுதந்திரதின நிகழ்வுகளை இலங்கையில் நடத்துவதற்கு தீர்மானம்

(கொழும்பூ

இந்த ஆண்டிற்கான உலக பத்திரிகை சுதந்திரதின நிகழ்வுகளை இலங்கையில் நடத்துவது என ஐக்கியநாடுகள் சபையின் கலாச்சார நிறுவனம் தீர்மானித்துள்ளதாக ஊடகத் தகவல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வுகளை யுனெஸ்கோவின் ஏற்பாட்டில் ஏப்ரல் 30ஆம் திகதி தொடக்கம் மே முதலாம் திகதி வரை நடத்துவதற்கான ஆயத் தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் டபிள்யூ. டி.கனேகல தெரிவித்துள்ளார்.

அதில் சுமார் 100 நாடுகளைச் சேர்ந்த செய்தியாளர்கள் பங்கேற்க இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், 'மஹிந்தவின் சிந்தனைகள்' என்ற கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக உலக சிறுவர் தினத்தை அனுஷ்டிக்கும் வகையில் அரச ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் விசேட நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-7)

# பொதுப் பரீட்சைகள் அடுத்த வாரம்

(கொழும்பு)

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அடுத்த வாரம் நான்கு பிரதான பொதுப் பரீட்சைகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்

இப்பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை விஞ்ஞான சேவை, கணக்காய்வாளர் சேவை, பொறியியலாளர் சேவை மற்றும் கட்டட கலைஞர் சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறக்காண் தடைப்பரீட்சை மற்றும் இரண்டாம் மொழி வாய் மொழிப்பரீட்சை என்பன எதிர்வரும் 18ஆம் 19ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளன.

திட்டமிடல் சேவையின் இரண்டாம் வகுப்பின் இரண்டாம்தர உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும் எதிர்வரும் 18ஆம் 19ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

(க-7)

# பொங்கல் சிறப்புக் கவிதைகள்

## ஏன் பொங்கவேண்டும்?



ஏன் பொங்கவேண்டும்?
எழுகின்ற கேள்வியிதே!
வான்சுடரை யேத்த
வளமான வகையிதுவே!

வையத்து உயிர்களுக்கு
வாழ்வளிக்கும் வான்சுடரை
கைகூப்பி வணங்குதற்கு
கனிந்திட்ட காலமிதே!

பொங்கிவரும் பொங்கலிலே
பொலிந்துவரும் உணர்வலைகள்
தங்கித் தமிழ்காக்கும்;
தாரணியில் பொங்கிடுவோம்!

அறம்பிழைத்த அரசியலின்
ஆணிவேர் தனையறுத்து
மறமுணர்த்த மாநிலத்தில்
மகிழ்வுடனே பொங்கிடுவோம்!

சுண்டிக்குளியூர் த.விதுரன்

## வான்சுடரோன் வரந்தரட்டும்!

பாகுபா டெதுவு மின்றி
பலனீயும் பகல வனாய்
வாகுடன் வழி சமைக்க
வலுவீவாய் தை மகளே!
தைமகளே யுனை வழுத்த
தரமான பொங்கலினை
வையத்தில் வைப்ப தற்கு
வான்சுடரோன் வரந் தரட்டும்!

தரும நெறி பரவி
தாரணியை யொளி யாள
கருமை கலைத் தழிய
கருத்துடனே பொங்கிடுவோம்!

உதித்துவந்து உல கோம்பும்
உதயனவ னுயர் சிறப்பை
மதித்தென்றும் மா நிலத்தில்
மகிழ்வுடனே பொங் கிடுவோம்!

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

## தன்மானப் பொங்கல் செய்வோம்!

நீதியை நிலத்திற் போட்டு
அநீதியை அர வணைக்கும்
தீதினைத் திருத்த வேண்டி
நீந்தமிழ்ப் பொங்கல் செய்வோம்!

பெற்றவ ரில்லம் விட்டு
பேயுடன் கூடி வாழும்
பற்றிலா உள்ள மீர்க்க
பாரினில் பொங்கல் செய்வோம்!
அடம்பன் கொடி யாக
அகிலத்தி லணி திரண்டு
தடம் பதித்துத் தமிழரினம்
தழைத்திட தைப்பொங்கல் செய்வோம்!
உண்மையே உயரு முண்மை
உலகமே உணரும் திண்மை
தண்மையாய்த் தமிழ் கொழிக்கும்
தன்மானப் பொங்கல் செய்வோம்!

மாங்குளம் கே.பி.திவ்யன்

## நிரந்தர தீர்வினைத் தந்திட வேண்டும்!

தை மகளே! நீ பிறந்திங்கே
தமிழருக்கு என்ன செய்வாய்...?
மையலுடன் எம்மைக் காதலித்து
மாற்றங்கள் ஏதும் தருவாயா?
உய்திடும் வழிகளை சொல்லி
உகந்த தோர் தீர்வினைத் தருவாயா
வையகம் வேண்டும் வரமதை
வாஞ்சையுடன் எமக்கிங்கு தருவாயா?
பொய்மகளாய் நீயிங்கு பிறந்திடாதே
புதுமைகளை மண்ணுக்கு சேர்த்திடு
எத்தனை காலமாய் கத்திக்கேட்கிறோம்
ஏனோ தானோ வென வந்து போகிறாய்
நிச்சயமாக இம்முறை நீ ஏமாற்றாமல்
நிரந்தரமான தீர்வதனை தந்திட வேண்டும்

–மதுரகவி காரை .எம்.பிஅருளானந்தன்

## "தை" மகளே தருவாய் தீர்வு!

தை யது பிறந்தால் மண்ணில்
வழியது பிறக்கும் என்னும்
முதுமொழி யதனை நீயும்
மெய்யெனக் காட்டு வாயோ?
மாநிலம் எங்கும் அமைதி
நிலவிட வழிசெய் வயோ?
தை யலே! தொடர் துயரம்
நீங்கிட வேண்டும்! ஏற்ற
தீர்வது தருவாய் நீயே!

தை மகள் வரவால் இந்தத்
தரணியில் மக்கள் எல்லாம்
மகிழ்வுற வாழ்வதற்கு
திருவருள் அருள்வாய் அம்மா!

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்

# தைப்பொங்கல் சிறப்பிதழ் - 2006


அன்பர்கள் நண்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

அசல் 22 கரட் தங்க நகைகளை எழில் மிகு வடிவில் செய்து பெற்றிட நாடவேண்டிய இடம்

**நியூ கார்த்திகா நகைமாளிகை**

இல 06, மகாராஜா கட்டடம்,
சுன்னாகம் சந்தி, சுன்னாகம்.
T.P: 0777 290816

**சிறி கார்த்திகா நகைத் தொழிலகம்**



சிறி கார்த்திகா நகைத் தொழிலகம்
இல: 212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0777 148047



அன்றும்!
இன்றும்!
என்றும்!
இதமான புகை இன்பத்திற்கு ஆர்.வி.ஜி பீடிகள்

**ஆர்.வி.ஜி பீடி ஸ்தாபனம்**

இல.58 நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 - 2226806

ஆங்கில மருந்து வகைகள் ஊட்டச்சத்து பால்மா வகைகள் என்பவற்றை நியாய விலையில் பெற்றுக்கொள்ள

**R.V.G மெடிக்கல்ஸ்**

இல. 504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 - 2222129





**எரிக் கணேஷ்**

- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து நவீன ரகக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்,
- இழந்த பற்களுக்கு நிகராக சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்,
- உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக் கொள்ளவும்,
- வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன முறையிலான கேஸ் வகைகளைப் பெற்றுக்கொள்ளவும்,
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்ரிக் லென்ஸ் போட்டோ கிறே லென்ஸ் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளவும் நாடுங்கள்.

(கட்டுப் பற்களைச் சுத்தம் செய்யும் மாத்திரை விற்பனைக்கு உண்டு)

கிளை இல.
91 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

கிளை இல.
80 கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

மூக்குக் கண்ணாடியகமும் பல் கட்டுமிடமும்
564, 566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 2486



## அனைவருக்கும் எமது தைப் பொங்கல் நல் வாழ்த்துக்கள்!




இலங்கை வங்கி **ரண் சுரெக்கும்**
அடகுச் சேவையின் சிறப்பு அம்சங்கள்

- ஒரு தங்கப் பவுணுக்கு ஆகக் கூடிய தொகை.
- குறைந்த வட்டியில் உபசரிப்புடன் கூடிய உடனடிச் சேவை.
- கொடுக்கல் வாங்கல்களின் இரகசியத்தன்மை, கொடுக்கல் வாங்கல்களுக்கென ஒதுக்கப்பட்ட அறையொன்றில் இரகசியமாக மேற்கொள்ளப்படும்.
- அடகு வைக்கப்படும் பொருட்களுக்கு அதிகூடிய பாதுகாப்பு.
- நன்கு பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள், ஏற்றுக்கொள்ளத்தக்க தரமதிப்பீடு, தங்க ஆபரணங்களின் தரத்தை தவறின்றி பரீட்சித்தலும், மதிப்பிடுதலும்.
- கணனிமயப்படுத்தப்பட்ட கிளைகளில் பகுதி பகுதியாக பணத்தை மீளச் செலுத்துவதற்கான வாய்ப்பு.
- தங்க ஆபரணங்களை அடகு வைக்கும் போது சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பிக்கவும், பணம் கிடைக்கும் சந்தர்பங்களில் குறித்த கணக்கில் சேமிப்பை மேற்கொண்டு அடைவை மீட்டுக் கொள்வதற்குமான வாய்ப்பு.
- அவ்வாறே கணக்கில் சேமிக்கும் தொகைக்கு வட்டியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு.
- தொடர்ந்தும் தங்கள் விருப்பத்திற்கேற்ப வங்கிக் கணக்கை நடைமுறைப்படுத்திக்கொள்ளும் சந்தர்ப்பம்.
- வியாபார நடவடிக்கைகளுக்காக மேலதிகப்பற்று வசதிகளைப் பெற்றுக் கொள்ளத்தக்க வாய்ப்பு.



BOC
இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி



அனைவருக்கும் எங்களது தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!

**பிரகாஸ் போக்குவரத்து சேவை**

கொழும்பு - கிளிநொச்சி - யாழ்ப்பாணம்

கொழும்பிலிருந்து பொருட்களை வடபகுதிக்கும் அங்கிருந்து விவசாய உற்பத்திப் பொருட்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் கொழும்பிற்கும் பரிமாற்றம் செய்யவும்
கோழி மற்றும் விலங்கினங்களின் தரம் வாய்ந்த உணவுகளின் வட மாகாண ஏக விநியோகஸ்தர்கள்

பிரகாஸ் போக்குவரத்து சேவை

இல. 455, 457, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No: 2222145 Fax: 2222958

இல. 221, டாம் வீதி, கொழும்பு - 12.
T.P. No: 011 2543310 011 2543309

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின் சுயசரிதை

### மீள்பார்வை 18



இறைவனைத் தேடும் அடியாராக...

கொல்லங்கோட்டிலிருந்து நடந்தே சென்று கொண்டிருந்தோம். எப்படி இருந்தாலும் பாலக்காட்டிலிருந்து பொள்ளாச்சிக்கு நடக்க வேண்டுமென்றால் நாற்பது மைல்கள் நடக்கவேண்டும்.நாங்கள் நடந்தது ஒரு எஸ்டேட் வழியான காட்டுப்பாதை. மாலை நான்குமணி அளவில் நடக்க ஆரம்பித்தோம்.பலத்த மழை, கண் விழிக்க முடியாதபடி மழை.மழையில் நனைந்துகொண்டே நடந்து வந்தோம்.

திடீரென்று எனது நண்பன் தங்கவேலு 'அய்யோ' என்று அலறினான். என்னவென்று கீழே பார்த்தால் ஒரு பாம்பு சென்று கொண்டிருந்தது.அவனைப் பாம்பு கடித்துவிட்டது.அப்பொழுது நடு ராத்திரி பன்னிரண்டு மணி, கொட்டுகிற மழை. நாங்கள் மூன்று பேர், கூடவே தங்கவேலின் அம்மா. அப்போது நாங்கள் என்ன செய்வோம்? கையில் ஆளுக்கு ஒரு சின்னத் தகரப்பெட்டி வேறு. அந்தப் பெட்டிகளையெல்லாம் அந்த அம்மா தலையில் சுமந்துகொண்டார்கள். என் நண்பன் தங்கவேலுவை, நானும் எனது மற்றொரு நண்பனும் தோளில் தூக்கிக்கொண்டு கொஞ்சத் தூரம் நடந்தோம். ஒரு சின்ன கிராமம் வந்தது.

அந்தக் கிராமத்துக்குள்ளே சென்றோம். ஒரு வீட்டிற்குச் சென்றவுடன் அந்தப் பெரியவர்கள் நாங்கள் நாடகத்தில் நடிக்கின்ற பிள்ளைகள் என்று தெரிந்து கொண்டார்கள். நாங்கள் சின்னப் பிள்ளைகள் அழகு அழகாக இருப்போம். எங்களைப் பார்த்தவுடன் அங்கே தங்கவைத்து, சாப்பாடு கொடுத்து, உடனே வைத்தியரை வரவழைத்து, தங்கவேலுவுக்கு ஆகவேண்டிய வைத்தியமெல்லாம் செய்து அவனுக்கு உயிர் கொடுத்தார்கள்.



'தெய்வமகன்' படத்தில்...(1969)

இரண்டு நாள் அங்கே தங்கினோம். அதற்குப் பிறகு பொள்ளாச்சி செல்வதற்கு ஏற்பாடு செய்து அவர்களே உதவி செய்தார்கள்.அப்போதெல்லாம் சரியான போக்கு வரத்து வசதியில்லை. அவர்கள் கொடுத்த காசை வைத்து வழியில் சாப்பிட்டுக்கொண்டு நடந்தே பொள்ளாச்சி வந்தோம். இது என் வாழ்நாளில் நடந்த துயரம் மிக்க பயணம். இதை மறக்கவே முடியாது.

டி.எஸ்.என்: பொள்ளாச்சியில் இருந்து நேராக திருச்சி வந்துவிட்டீர்களா?

சிவாஜி:இல்லை...பொள்ளாச்சிக்கு பக்கத்தில் போத்தனூர் என்று ஊர் உள்ளது. அங்கே என்னுடைய நாடகக் கம்பெனியில் இருந்த பழைய நண்பன் ஒருவன் இருந்தான்.அவனைக் கூப்பிட்டு ஒரு சிலரைச் சேர்த்துக் கொண்டு அங்கேயே ஒரு நாடகம் நடத்தினோம். நாங்கள் மூன்று பேர். அவன் ஒருவன், அப்புறம் ஊரில் உள்ள வேஷம் போடத் தெரிந்தவர்களையெல்லாம் கூப்பிட்டு அங்கே போத்தனூரிலே நாடகம் நடத்தினோம். அதில் மக்கள் கொடுத்த பணத்தை வைத்துக் கொண்டு அந்த நாடகம் முடிந்தவுடன் நாங்கள் நால்வரும் அங்கிருந்து பஸ் பிடித்து திருச்சி போய்ச் சேர்ந்தோம்.

வீட்டிற்குச் சென்ற பிறகு ஆண்டவனே இனியும் இந்த நாடகக் கம்பெனி வேண்டவே வேண்டாம்... பட்டதே போதும். இனிப் பட முடியாது. துயரம் என்று நினைத்து வீட்டிலேயே சும்மா உட்கார்ந்து விட்டேன்.

### சும்மா இருக்க முடியுமா?

டி.எஸ்.என்: எவ்வளவு காலம் இவ்வாறு சும்மா இருந்தீர்கள்?

சிவாஜி: ஒரு மாத காலம் சும்மா இருந்திருப்பேன். அந்த நேரத்தில் வீட்டில் மிகச் சிரமம். சும்மா இருக்க முடியுமா? எப்படியாவது கஷ்டப்பட்டு அம்மாவுக்கு கொஞ்சம் உதவியாக இருக்கவேண்டாமா? என்று நினைத்தேன். அப்போது திருச்சியில், திருச்சி ஸ்ரீரங்கம் டிரான்ஸ்போர்ட் என்று ஒரு கம்பெனி இருந்தது. அது டி.எஸ்.டி என்ற பஸ் கம்பெனி. அதில் என் நண்பரின் உதவியோடு நான் ஒரு சின்ன வேலையில் சேர்ந்து மெக்கானிக்கல் வேலை எல்லாம் ஒரு மாதத்தில் கற்றுக் கொண்டேன்.எனக்கு ஏழு ரூபாய் தான் சம்பளம் கொடுத்தார்கள்.

7ரூபாய் என்றால் எவ்வளவு பெரிய சம்பளம் அது! எங்க அம்மாவுக்கு ஒரு உதவியாக இருந்தது. 'ஆனால் நான் மட்டும் மானசீகமாக நடித்துக்கொண்டே இருந்தேன்' ஏனெனில் என்னுடைய உள்ளத்தில் நடிப்புத்தான் பிரதானமாக இருந்தது. மெக்கானிக் வேலை கற்றுக்கொண்டிருக்கும் பொழுதே, என் உள்ளத்தின் அடித்தளத்தில் விண், விண்ணென்று ஒரு வலிஇருந்தது. 'என்னடா , நாம் ஒரு டாக்டர். இரும்பைத் தூக்கிக் கொண்டு இருக்கிறோமே, நமக்கு எப்படியாவது ஒரு விடிவு காலம் வராதா ? அல்லது இப்படி யே போய்விடுமா? ' என்று நினைத்துக் கொண்டே இருந்தேன்.

அப்போது பொன்னுசாமிப்பிள்ளையின் பாலகானசபா,மங்களகான சபா என்ற புதிய பெய ருடன், நாடகங்கள் நடத்திவந்தனர். 'டி.கே.சம்பங்கி, எம்.இ.மாதவன்' என்கிற புகழ் பெற்ற நாடக நடிகர்கள் இருந்தனர். அவர்கள் இந்தக் கம்பெனியை வாங்கி, கும்பகோணத்தில் நாடகம் நடத்திக்கொண்டிருந்தார்கள். என்னுடைய நண்பன் ஒருவன் அந்தக் கம்பெனியிலிருந்து ஊருக்கு வந்தான். என்னைப் பார்த்து 'என்னடா நீ மெக்கானிக் வேலையா பார்க்கிறாய்?' என்று கேட்டு, 'வாடா, திரும்பவும் நாடக கம்பெனிக்கு போகலாம்.கம்பெனி முதலாளி என்னிடம் நல்ல நடிகர்கள் இருந்தால், அழைத்து வரச்சொன்னார்' என்று கூறினான். நான் உடனே என் தாயாரிடம் இது பற்றிக் கேட்டேன். அவர்களுக்கு, மறுபடியும் தன் பிள்ளையை நாடகக் கம்பெனிக்கு அனுப்பு வதற்கு மனமில்லை.ஏனென்றால் 'மறுபடியும் ஏன் அங்கு சென் று கஷ்டப்படுவானே?' என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்திருக்கலாம்.

(தொடரும்)

# செய்தித் துளிகள்

## இந்தியாவிடம் உதவிகோரும் இலங்கைக் கடற்படை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்தி வரும் தாக்குதலுக்கு எதிராக தாக்குதல் நடத்த இலங்கைக் கடற்படை, இந்தியாவிடம் ஒத்துழைப்பு கோரியுள்ளது. ஏற்கனவே இந்தியக் கடற்படையுடன் நெருங்கி செயற்பட்ட அனுபவம் உள்ளது.

இரண்டு படைகளுக்கும் இடையில் தகவல்களை பரிமாறிக் கொள்ளக்கூடிய தொழில்நுட்பங்கள் உள்ளன.எனவே தற்போது இலங்கைக் கடற்படையினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தும் போது இந்த ஒத்துழைப்பு ஏற்படுத்திக்கொள்ள விரும்புவதாக விஜேகுணரட்ன என்ற கடற்படை அதிகாரி தெரிவித்ததாக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது. இதுதொடர்பில் இலங்கையின் கடற்படை அதிகாரிகள் அந்தமான் நிக்கோபார் தீவுகளிளில் பணியாற்றும் கடற்படை அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாகவும் இந்த ஊடக இதழ் தெரிவித்துள்ளது. (க)

## 'கொள்ளை'நோயினால் கோழிகள் இறப்பு

(மருதங்கேணி)

வடமராட்சிப் பகுதியல் கொள்ளை நோயினால் பெருமளவு வளர்ப்புக் கோழிகள் இறந்து வருகின்றன.

கரவெட்டி, புலோலி, துன்னாலை, கற்கோவளம் பகுதிகளில் வளர்ப்புக் கோழிகள் நூற்றுக் கணக்கில் இறந்துள்ளன.

பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்தியசாலை வைத்திய அதிகாரி சி.வசீகரனை தொடர்பு கொண்டு இதுபற்றிக் கேட்ட போது,

வீடுகளில் வளர்ப்புக் கோழிகளுக்கு தடுப்பு மருந்து கொடுக்காதமையினாலேயே இக் கோழிகள் இறந்துவிடுகின்றன.

கால்நடை நிலையத்தில் தடுப்பு மருந்து ஒவ்வொரு வாரமும் வழங்கி வருகிறோம். இதனைப் பெற்று கோழிகளுக்கு கொடுத்தால் இக் கொள்ளை நோயிலிருந்து காப்பாற்ற முடியும் என்றார்.

இதேவேளை, இது பறவைக் காய்ச்சல் நோயல்ல. இது கொள்ளை நோய் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (க-35)

## விசேட மாநாடு

(யாழ்ப்பாணம்)

யெகோவாவின் சாட்சிகளின் "உங்கள் கண்களை எளிமையாக வையுங்கள்" என்ற தலைப்பிலான ஒருநாள் விசேட மாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.40 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(து-132,133)

## நாடு திரும்பினர்

(கொழும்பு)

சவூதி அரேபியாவிற்கு வேலை தேடிச் சென்ற 349 இலங்கையர்கள் நேற்றுமுன்தினம் இடை நடுவில் நாடு திரும்பியுள்ளனர்.

தமக்கு சவூதி அரேபியாவில் உரிய வேதனங்கள் கிடைக்காமை, வேலையில் திருப்தியின்மை போன்ற காரணங்களை அடுத்தே இவர்கள் நாடு திரும்பினர்.

இவர்களில் ஆண்களும் பெண்களும் அடங்குகின்றார்கள். (த-9)

## நிதியுதவி

(நல்லூர்)

படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளை சுயதொழில் முயற்சியில் ஊக்குவிக்கும் பொருட்டு, யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நாயன்மார்க்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலைய மாதர் சங்கத்துக்கு தமது 2005க்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து 85 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். (க-134)

★ ★ ★

(நல்லூர்)

சிறுவர் பாதுகாப்பு நிதியம், ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்திற்கு மதில் கட்டுவதற்காக இரண்டரை இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இதற்கமைய தற்பொழுது இதற்கான மதில் கட்டும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. (க-134)

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் மற்றும் தமிழ்மொழிப் பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

முதுமாணிப் பட்டத்துக்கான கூடிய தகமையுடைய தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர்க்கு முக்கியத்துவம் வழங்கப்படுமென்று கூறப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு தேசிய கல்வி நிறுவகப் பணிப்பா ளர் நாயகம் பேராசிரியர் ஜே.டபிள்யூ. விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழிப் பணிப்பாளர் பதவி கடந்த சிலகாலமாக வெற்றிடமாக இருந்து வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## 'கலைக்கோட்டம்' திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் தனது நாற்பதாவது ஆண்டு நிறைவில் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்துமுகமாக 128, டேவிற் வீதியில் புதிதாக அமைத்த 'கலைக்கோட்டம்' என்னும் கட்டடத் தொகுதியை நாளை நண்பகல் 12மணிக்கு அருள்திரு ஜே.வி.ஈ.செல்வராசா அடிகளாரால் திறந்துவைக்கப்படவுள்ளது. (து-132,133)

## சனநெரிசலில் 345 பேர் பலி

(றியாத்)

ஹஜ் கடமைகளை நிறைவேற்றுவதற்காக சவூதி அரேபியா சென்றிருக்கும் முஸ்லிம் யாத்திரிகர்களில் சுமார் 345பேர் சன நெரிசலில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மினா என்ற இடத்தில் கல் எறியும் கடனை நிறைவேற்ற முயன்ற தருணத்தில் சனநெரிசல் ஏற்பட்டது.

'ஜமாரத்' என்ற பாலத்தில் சனம் முண்டியடித்துக் கொண்டதால் இவ் அசம்பாவிதம் நிகழ்ந்ததாகவும் இந்தச் சம்பவத்தில் 289பேர் வரை காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தினால் யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கிராம்புவில் படையாண்டான் தோட்டம் கந்தசுவாமி ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 9மணிக்கு தைப்பொங்கல்விழா நடைபெறவுள்ளது.

இந்து கலாச்சார அபிவிருத்தி உதவியாளர் சீ.மகிந்தினி தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில். சாவகச்சேரி பிரதேச செயலாளர் செ.ஸ்ரீனிவாசன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பார்.

தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (க-2)

## மாலை 3மணியுடன் வெறிச்சோடும் காவலூர்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை வர்த்தகர்கள் மாலை 3மணியுடன் கடைகளைப் பூட்டுவதால் மாலையில் காவலூர் நகரப்பகுதி வெறிச்சோடிக் காணப்படுகின்றது. மாலை 5,6மணி பஸ்களில் பயணிகள் குறைவாகவே காணப்படுகின்றனர். முன்பு இப்பகுதியில் இரவு 10மணி வரை சன நடமாட்டம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-72)

## புனித-செபஸ்தியார் திருவிழா

(ஊர்காவற்றுறை)

மன்னார் புதிய-செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 11 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. பங்குத் தந்தை-அருட்திரு தேவராசா அடிகள் தலைமையில் நடைபெறும் இவ்விழா எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் நிறைவு பெறும். (த-72)

நாங்கள் சேற்றில் கால் வைக்காவிட்டால்; நீங்கள் சோற்றில் கைவைக்க மாட்டீர்கள்.

-யாரோ

வலம்புரி

# உள்ளம் பொங்குகின்றது தைமகளே தணிப்பாளா?

தைபிறந்தால் வழிபிறக்கும் என்பது நம் முன்னோரின் வாக்கு. தமிழர்களின் வாழ்வியலில் தைப்பிறப்பிற்கு வழங் கப்படும் முன்னுரிமை மகத்தானது.

உழுது பயிர் செய்த விவசாயி தனக்கு உறுதுணையாக இருந்த கதிரவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் தைப்பொங்கல் விழா அமைந்துள்ளது.

இதற்குப் அப்பால் தமிழர்களின் நன்றி மறவா உயர் பண்பாட்டு விழுமியம் தைப் பொங்கல் ஊடாக பரிணமிக் கின்றது.

உலகு வாழ் மக்கள் அனைவரும் உறுபசி தீர்க்கும் உததமர்களாக விளங்குபவர்கள் விவசாயிகளே. அதன் கார ணமாகவே 'உழு துண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல் லாம் தொழுதுண்டு பின்செல்வர்'. என்ற வாசகம் தோற்றம் பெற்றது.

இவ்விதம் விவசாயிகளின் பெருமை பறை சாற்றப் பட்டிருப்பினும் தமக்குத் துணையாக இருக்கின்ற கதி ரவனைத் தெய்வமாக வழி படும்அற்புதம் தமிழர்களுக்கே உண்டு. இது அவர்களின் உயரிய பண்பாட்டிற்கு நல்ல தோர் எடுத்துக்காட்டாகும்.

விவசாயச் செய்கையில் கதிரவனின் செயல் கண்டு அவனுக்கு நன்றி செலுத்துவதற்காக புத்தரிசி எடுத்து புதுப்பானையில் பொங்கிப் படைத்து உறவினர்களுடன் உண்டு மகிழும் இந் நிகழ்விற்கூடாக விஞ்ஞான அறிவும் சிந்தனையும் தமிழர்களின் வாழ்வியலில் பின்னிப்பிணைந் துள்ளமை உறுதியாகின்றது.

'நன்றி' என்ற வார்த்தைக்கு உயரிய மதிப்ப ளிப்பதில் தமிழர்களுக்கு இணையாக யாருமே இல்லை என்ற உண்மை தைப்பொங்கல் ஊடே உணர்த்தப்பட்டாலும் ஈழத் தமிழர் பேரினவாத சிந்தனையால் நிம்மதியற்று வாழ்வது மிகவும் வேதனைக்குரியது.


குறிப்பாக வட பகுதி மக்களின் வாழ்விடங் கள், பயிர் செய் நிலங்கள் உயர் பாதுகாப்புவல யம் என்ற பெயரால் கபளீகரம் செய்யப்பட்டுள் ளது.

இதன் காரணமாக தமிழர்களின் விவசாய நிலங்கள் வானம் பார்த்த பூமியாக காட்சி தருகின்றன. விளை நிலத் தில் உழைத்து உயர்ந்தவர்கள் இன்று சொந்த மண் ணைப் பறி கொடுத்து அகதி முகாம்களில் வாழும் பரி தாபம் என்றுதான் தீரும்.

தனக்கென்றொரு நாடு இருக்கும் போதே இவை சரி யாகும் என்ற மனநிலையில் இருக் கும் விவசாயிகளுக்கு இது இனிமை யான பொங்கல் அல்ல.

பதினைந்து வருடங்களுக்கு மேலாக நிலத்தைப் பறி கொடுத்துவர்களின் மனங்கள் பொங்குகின்றன. அந்தப் பொங்கலைப் பிறக்கின்ற தைமகள் தணிப்பாளாயின் அடுத்த பொங்கல் உள்ளத்துப் பூரிப்போடு சொந்த இடங்களில் பொங்கிப் பிரவாகிக்கும் என்பது உறுதி.

# விடுதலைப் புலிகளை அல்கெய்தா அமைப்புடன் அமெரிக்கா ஒப்பிடுவது பொருத்தமற்றது — இரா.சம்பந்தன்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை ஒசாமா பின்லேடனின்அல்கெய்தா அமைப் புடன் ஒப்பிட்டுப் பார்க்கும் தன்மையை அமெரிக்கா கொண்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.

சமீப காலமாக இடம்பெறும் வன்செயல்களுக்கு அமெரிக் கத் தூதுவர் தெரிவித்த கருத்துக்கு பதிலடியாகவே சம்பந் தனின இக் கருத்து அமைந்துள்ளது.

வன்செயல்களைக் கண்டிக்கும் அதேவேளை, இந்த நிலைப்பாட்டுக்கு இரண்டு தரப்பினருமே பொறுப்பேற்க வேண்டுமென்றார். விடுதலைப் புலிகள் வன்முறைக்குத் தயாராகின்றனர் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரி லான்ஸ்டெட் கூறியுள்ளார்.

வன்முறை என்பது ஒரு பக்கத்திலிருந்து உருவாவது அல்ல. இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக விடுதலைப் புலிகள் இதய சுத்தி யுடன் பல பணிகளில் ஈடுபடுகின்றனர். குறிப்பாக அவர்கள் அபிவிருத்தி மற்றும் மீள்குடியேற்றம் போன்ற நடவடிக்கை களில் முனைப்புடன் பங்குகொள்கின்றனர்.

மீள்குடியமர்வு தொடர்பாக எத்தனையோ ஆலோசனைக் கூட்டங்களில் விடுதலைப் புலிகள் பங்கேற்ற போதும் எதுவித பயனும் ஏற்படவில்லை.

ஆகக் குறைந்த பட்சம் ஆழிப்பேரலை மீளமைப்புக் கான பொதுக்கட்டமைப்பைக் கூட இலங்கை அரசாங்கத் தால் நடைமுறைப்படுத்த முடியவில்லை.

எவ்வாறானாலும் தென்னிலங்கையில் யுத்த நிறுத்தம் தொடர்பான பேச்சுகளுக்கு அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் விரைவில் இணக்கப்பாட்டுக்கு வருவார்கள் என அவர் மேலும் நம்பிக்கை தெரிவித்திருந்தார். (க-9)

# ஐ.தே.கவை குறை சொல்வதில் அர்த்தமில்லை; பிரச்சினைக்குத் தீர்வுபெற வழி காணுங்கள்! — திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

அரசாங்கம் முகம் கொடுக்க வேண்டிய பிரச்சினை களுக்கு எல்லாம் ஐக்கிய தேசியக் கட்சியை குறை கூறிக் கொண்டிருக்காமல் தீர்வுகாண முயற்சிக்க வேண்டும் என்று அக்கட்சி கூறியுள்ளது.

இது தொடர்பில் கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கருத்துக் கூறுகையில்,

'மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பொறுப்பேற்று 50 நாட்களான பின்பும் அவரது கூட்டணியினரும் அமைச் சர் களும் எந்த ஒரு பிரச்சினைக்கும் ஐக்கிய தேசியக் கட்சி யையே குறை கூறுகின்றனர். வடக்கு-கிழக்கின் பாதுகாப்பு நிலைமைகளுக்கு எம்மைக் குறை சொல்லுகின்றனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்காக தேர்தலுக்கு முன்பாக முதலைக் கண்ணீர் வடித்த ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் மஹிந்தவுக்கு கொடுத்திருக்கும் அழுத்தம் என்ன? எம்மைக் குறை கூறாமல் யுத்த நிறுத்த ஒப்பந்தத் தைச் செயற்படுத்தவும் பாதுகாக்கவும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

இராணுவத்தினரைக் கொண்டு நடத்தப்படுகிற சுற்றி வளைப்பு மற்றும் தேடுதல்களின் போது அப்பாவி மக்கள் துன்புறுத்தப்படுகின்றனர். இது பாரிய மனித உரிமை மீறலாகும். தேசிய அடையாள அட்டை இல்லை என்பதற் காக நூற்றுக் கணக்கானோரை விசாரணைக்குட்படுத்து கிறது அரசாங்கம்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்களை பொலிஸ்மா அதிபருக்கு கையளித்திருப்பதன் மூலம் மஹிந்த ராஜபக்ஷ, பொலிஸ் அரசாங்கத்தை உருவாக்கி வருகிறார். இதுதான் அவர் உருவாக்குகின்ற புதிய சிறிலங்கா போலுள்ளது. சுயாதீன ஆணைக்குழுவினது பரிந்துரை களை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள் ளவே இல்லை.

நாட்டின் இராணுவம் என்பது அரசாங்கத்துக்கு பணிந் திருக்க வேண்டுமே தவிர ஒரு கட்சிக்கு அல்ல. அரசியல் வாதிகளின் பின்னால் இராணுவத்தினர் ஓடிவருகின்ற நிலைமை இருக்கக் கூடாது. அது இராணுவத்திற்குள் பாரிய பிளவுகளை ஏற்படுத்தும்' என்றார். இந்த ஊடகவிய லாளர் கூட்டத்தில் பங்கேற்ற ஐ.தே.க வின் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கருணதிலக்க கூறுகையில்,

'மஹிந்தவின் 50 நாள் ஆட்சியில் 115பேர் வடக்கு-கிழக்கில் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 64பேர் படை யினர். எமது ஐக்கிய தேசியக் கட்சியின் 2 ஆண்டுகால ஆட்சியில் ஒரு சவப்பெட்டி கூட தென்னிலங்கைக்கு வந்தது கிடையாது. இப்படியான சூழலில் எங்களை எப்படி அரசாங் கம் குற்றம் சுமத்தமுடியும்? நாடு எதிர்நோக்கியிருக்கும் சவால்களுக்கு ஜாதிக ஹெல உறுமயவும், ஜே.வி. பியும் தான் பதில் கூற வேண்டும்' என்றார். (து)

# 'சண்டே லீடர் ஆசிரியரை நான் மிரட்டவில்லை' ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மறுப்பு —

(கொழும்பு)

சண்டே லீடர்வார இதழின் ஆசிரியர் லசந்த விக்ரம துங்கவை தான் மிரட்டவில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ மறுத்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி சிராந்தி குறித்து சண்டே லீடரில் எழுதியமைக்காக தம்மை தொலைபேசி யில் தொடர்பு கொண்டு மஹிந்த ராஜபக்ஷ மிரட்டியதாகவும், மஹிந்தவால் தன் உயிருக்கு ஆபத்து உள்ளதாகவும் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவுக்கு லசந்த விக்ரமதுங்க கடிதம் அனுப்பியிருந்தார்.

இதை மறுத்த மஹிந்த ராஜபக்ஷ இதுபற்றி மேலும் கூறியுள்ளதாவது,

சண்டேலீடரின் ஆசிரியரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு என் மனைவி மற்றும் குழந்தைகள் குறித்து பத்திரிகை தர்மங்களுக்கு மீறி எழுத வேண்டாம் என்று வேண்டுகோள் தான் விடுத்தேன். இதற்கு முன்பும், ஜனா திபதித் தேர்தலுக்குப் பின்பும் அவரிடம் பலமுறை தொலை பேசியில் உரையாடியதைப் போலவே தற்போதும் பேசி னேன். ஆனால் இதை அச்சுறுத்தலாக அவர் கருதி யுள்ளார் என்றார். (க)

## அமைதி முயற்சிகளை முன்னெடுக்க 10 அமைச்சர்களை வெளிநாட்டுக்கு அனுப்ப மஹிந்த தீர்மானம் —


(கொழும்பு)

இலங்கை அமைதி முயற்சிகள் முன்னெடுத்துச் செல் வதற்கான அரசாங்கத்தின்பங்களிப்புபற்றி சர்வதேச சமூகத்திற்கு விளக்கமளிப்பதற்காக அமைச்சர்கள் குழுவை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார்.

சுமார் 10 அமைச்சர்களை இதற்கென அனுப்புவதற்கு மஹிந்த தீர்மானித்திருப்பதாகவும் தெரிகின்றது. அண் மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான அரசாங்கத்தின் பங்களிப்புக் குறித்தும் விடுதலைப் புலிகளி னால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் குறித்தும் சர்வ தேச சமூக்திற்கு விளக்கமளிப்பதே இந்தப் பயணத்தின் நோக்கம் என்றும் அரசாங்க வட்டாரத் தகவல்கள் தெரி விக்கின்றன. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மற்றும் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் ஆர்வமுள்ள நாடுகளுக்கு இந்த அமைச்சர்களை அனுப்புவற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. (து)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



நாம் பந்தப்பட்டவர்கள் என்ற எண்ணம் வெறும மாயை. நாம் இன்பம் அனுபவிக்கிறோம். நாம துன்பம் அனுபவிக்கிறோம் என்ற எண்ணங்களும மிகப் பெரிய கற்பனையே. அனுபூதி என்பது இடை யறாது சிந்தித்து அதை நம்மில் ஒரு பகுதி யாகச் செய்து கொள்வதாகும்.

சுவாமி விவேகானந்தர்

# மட்டக்களப்பு, அம்பாறையில் இருவர் நேற்று சுட்டுக் கொலை

மட்டக்களப்பு கல்லடியில் நேற்று அடையாளம் தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் முன்னாள் ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் கொல்லப்பட்டார்.

அருளம்பலம் சுந்தரலிங்கம் (வயது-36) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவர்.

சுனாமியின் போது தனது இருப்பிடத்தை இழந்து மனைவி மற்றும் குழந்தைகளுடன் கல்லடி நெசவு நிலையம் அகதி முகாமில் தற்காலிகமாகத் தங்கியிருந்தார்.

மட்டக்களப்புக் கல்முனை வீதியில் உள்ள வாகை மரத்தடியில் மீன் வாங்குவதற்காக சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் வழிமறித்த நபர்களினால் இவர் சுடப்பட்டார்.

மட்டக்களப்பு மாவட்ட பதில் நீதிபதி சந்திரன் சின்னையா முன்னிலையில் சடலத்தை அடையாளம் காட்டிய மரணமடைந்தவரின் மனைவி இக்கொலையுடன் தொடர்புடையவர்களைத் தமக்குத் தெரியாது எனத் தெரிவித்தார்.

இதே வேளைஅம்பாறை மாவட்டம் சம்பாந்துறைப் பிரதேசத் தில் உள்ள நயினாக் காட்டில் நேற்றுக் காலை கூலித் தொழிலாளி ஒருவர் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

செங்கல் உற்பத்திசாலையில் பணி புரியும் சொலமான் முப்பை முஹமட் இஸ்மாயில் (வயது-33) என்பவரே கொல்லப்பட்டவராவார். இவர் வழக்கம் போலே வேலை செய்து கொண்டிருந்தபோது அங்கு வந்த ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

(ச-4)

## இராஜபாதை-குளப்பிட்டி...

பரமநாதன் ரதீஸ்காந் (வயது-23) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். இவர்கள் இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க கொக்குவில் மேற்கு குளப்பிட்டிப் பகுதியில் இராணுவத்தின் மீது நேற்றுக் காலை கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து அப்பகுதியில் நின்ற பொது மக்கள் சிதறியடித்தவாறு ஓட்டம் பிடித்தனர். இத்தாக்குதலின் போது எவருக்கும் காயமெதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-132,133)

## கிரனைட் தாக்குதலில் சிப்பாய் பலி

மல்லாகம் காங்கேசன் துறை வீதி 7ஆம்கட்டைப்பகுதியில்நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டு மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இதனையடுத்து இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொதுமகன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

தொடர்ந்து அப்பாதையில் சென்றுகொண்டிருந்த மக்களை இராணுவத்தினர் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதேவேளை அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத்தின் போது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-122,4,132,133)

## அரசியல்துறைப்...

கும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இவற்றை இனங்கண்டு தீர்ப்பதற்கான மாற்று வழிகளினை ஏற்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

யாழிலிருந்து இடம் பெயர்ந்து வரும் மக்களுக்கான உதவிகள், யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து இடம் பெற்றுவரும் அசம்பாவிதங்கள், அத்துமீறல்கள் தொடர்பாக உடனடியாக மக்கள் முறையிடுவதற்கான செயலகம் ஒன்றை திறப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டு முடிபுகள் எடுக்கப்பட்டுள்ளன. (ச-4)

# சாந்தியும் சமாதானமும் நிலவ இறைவனைப் பிரார்த்திப்போம்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாம் அனைவரும் இன மத மொழி வேறுபாடுகள் இன்றி பேதங்களைமறந்து ஒற்றுமையாக கைகோத்து வாழ்வதன் மூலம் நிரந்தர சமாதானத்தை உருவாக்க முடியும் என இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பலாலி படைத் தலைமையகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இராணுவத் தளபதியின் வாழ்த்துச் செய்தியிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் எதிர்கால வாழ்வில் சகல எதிர்பார்ப்புக்களும் நிறைவேறி சாந்தியும் சமாதானத்துடனும் சௌபாக்கியத்துடன் வாழவும் கமத்தொழில் வெற்றிகரமாக அமையவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிராார்த்திப்பதாக இராணுவத்தளபதியின் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

## புலிகளின் கட்டுப்...

விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் வருகை தந்துகொண்டிருக்கின்றார்கள்.

இடம் பெயர்ந்து வருகின்ற மக்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் உள்ளூர் தொண்டு நிறுவனங்கள் பராமரித்து வருகின்றன. இந் நிலையில் இடம் பெயர்ந்து வருகின்ற மக்களுக்கு உடனடி மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உட்பட உள்ளூரில் இயங்குகின்ற நிறுவனங்களுக்கூடாக சர்வதேச தொண்டு நிறுவனங்கள் என்ற வகையில் இடம் பெயர்ந்து வருகின்ற மக்களுக்கு தங்களால் இயன்ற உதவிகளை வழங்க முன்வரவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இச் சந்திப்பில் கலந்து கொண்ட சர்வதேச தொண்டர் அமைப்புக்களின் பிரதி நிதிகள் இது தொடர்பாக தமது தலைமைப் பீடத்துடன் கலந்தாலோசித்து சாதகமான முடிவெடுப்பதாக தெரிவித்துள்ளனர்.

இக் கலந்துரையாடலில் யு.என், ஐ.சி.ஆர்.சி, போறூட், கெயர், ஒக்ஸ்பாம், எஸ்.சி.எவ், சொலிடார், வேல்ட் விசன், டெனிஸ், அகதிகள் பேரவை ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் ரஞ்சன், தமிழீழ விடுதலைப்புலிகளின் அரச, அரசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் மு.பாவரசன், தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்டமிடல் பணிப்பாளர் லோறன் கிறிஸ்ரி, திட்டமிடல் செயலகத்தைச் சேர்ந்த மதி ஆகியோர் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதேவேளை இது தொடர்பாக மீண்டும் ஒரு கலந்துரையாடல் எதிர்வரும்20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

(ச-4)

## வன்முறைகளை...

படை நேற்றிரவு பத்திரிகை குறிப்பொன்றை அனுப்பிவைத்தது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

தமிழ் மக்கள் தமது போராட்ட வரலாற்றில் தமக்கு எதிராகச் சூளுரைத்த பல சிங்களத் தலைவர்களையும் வீராப்புப் பேசி பேர் முரசு கொட்டிய இராணுவத் தளபதிகளையும் கண்டவர்கள்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா முதல் பிரேமதாசா, டில்சிறி பண்டா விஜயதுங்க, சமாதானப் புறா சந்திரிகா வரை எமது இனத்தை அழிப்பதற்கு கங்கணம் கட்டி நின்றவர்கள்.

இந்த வரிசையில் இன்று பழைய பல்லவிக்கு புதிய மெட்டமைத்து சிங்கள தேசத்திற்கு மங்களம் பாட புறப்பட்டு இருக்கின்றார் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா. சிங்களத்தின் இன்னுமொரு 'சப்புமல் குமர' வாக தன்னை நிலை நிறுத்த முயலும் சரத் பொன்சேகா தமிழர் தரப்பைப் பற்றி தப்புக் கணக்குப் போடுவதுதான் வேடிக்கை.

எவராலும் எளிதில் அறியப் பட முடியாத புலிப்படையின் எண்ணிக்கையை வெறும் 5 ஆயிரம் மட்டுமே என அரிச்சுவடி படிக்கும் இத் தளபதி யாராலுமே வெற்றி பெற முடியாதென மார்தட்டி நின்ற ஆனையிறவு தளத்தில் நின்றும் ஜெயசிக்குறுவில் இருந்தும் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என தலைதெறிக்க ஓடியதை மறந்து விட்டார்கள்.

சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக கிளந்தெழும் பொது மக்கள் படையினராகிய எமது தாக்குதலுக்கு முகம் கொடுக் கமுடியாமல் திணறும் சிங்கள இராணுவம் பின்னர் அப்பாவி மக்களை படு கொலை செய்கின்றது. இதற்கு விரைவில் முடிவு கட்டுவோம் என்று மக்கள் படையின் பிரசுரத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# இராணுவத் தாக்குதல்களை நிறுத்த...

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ளதா? அப்படியானால் தற்போது இடம் பெற்று வரும் தொடர் படுகொலைகள் மற்றும் தாக்குதல் சம்பவங்கள் ஆகியவை தொடர்பில் இரு தரப்பினதும் பதில்தான் என்ன என்று யுத்த நிறுத்தக்கண்காணிப்புக்குழு கேள்விக்கணை தொடுத்துள்ளது.

கண்காணிப்புக் குழு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இக் காட்டமான கேள்விக்கணையினைத் தொடுத்துள்ளது.

கொலைகளும் பாரதூரமான தாக்குதல் நடவடிக்கைகளும் தொடர்ந்து இடம் பெறுகின்றன.

இவற்றைத் தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக செயற்பட வேண்டும்.

இல்லையேல் மீண்டும் ஒரு யுத்தம் மூள்வதை யாராலும் தடுக்க முடியாது.

வவுனியா செட்டிகுளத்தில் கடற்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு கொடுக்கப்பட்ட பேரிடியாகும்.

இத்தகையதாக்குதல்களும்பதில் தாக்குதல்களும் தொடருமேயானால் யுத்த நிறுத்த உடன்படிக்கை முற்றுப் பெற்றுவிடும்.

இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் குறித்து விடுதலைப்புலிகள் மீது பல்வேறு சர்வதேச சமூகத்தினர் குற்றஞ்சாட்டி வருகின்றபோதும் அச்சம்பவங்களுடன் தமக்குத் தொடர்பில்லை என விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றனர்.

இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களின் பின்னணியில் பொது மக்களே இருப்பதாக விடுதலைப்புலிகள் கூறிவருவது ஏற்றுக் கொள்ளப் படமுடியாததொன்றென்பதை உணர்வதாகவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயின் பொது மக்களும் பெருமளவான அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இராணுவத்தினரின் அதிகரிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக பொது மக்கள் பாரியளவில் துன்புறுத்தப்படுகின்றனர் எனப் பல தகவல்கள் ஆதார பூர்வமாக வெளியாகியுள்ளன.

தாக்குதல்களின் காரணமாக துன்புறுத்தல்கள் தமிழ் மக்கள் மீதே திணிக்கப்படுகின்றன.

இத்தகைய சம்பவங்கள் இடம் பெறுவதைத்தடுப்பதற்கு அரசாங்கமும் இராணுவத்தினருமே நடவடிக்கை எடுக்க வேண்டும் என கண்காணிப்புக் குழு கேட்டுள்ளது.

இவர்களின் நடவடிக்கையினால் யுத்தநிறுத்த உடன்படிக்கை பலம் குன்றியுள்ளது என்றும் இரு தரப்பினருக்கிடையே பதற்றம் அதிகரிப்பதற்கான இதுவே பிரதான காரணங்களில்ஒன்றாக அமைந்துள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.எனவே வெவ்வேறு பெயர்களில் செயற்பட்டு வரும் ஆயுதக்குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடமேயுள் ளது.

இதன் மூலம் பாதிக்கப்பட்ட பகுதி களில் சுமுத்தி ணைநிலை நாட்ட முடியும்.

சொல்லிலும் பார்க்க செயற்பாடுகள் பலனளிக்கும் என்பதால் இலங்கையில் யுத்தம் மூள்வதைத் தடுப்பதற்கு சம்பந்தப் பட்டதரப்பினர் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என கண்காணிப்புக் குழு கேட்டுள்ளது. (ச-4)





வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான வழிகாட்டல்கள்

- சுத்திகரிப்பாளர்கள் (ஆண்)
- மருத்துவமனை சுத்திகரிப்பாளர்கள் (பெண்)
- விமான நிலைய சுத்திகரிப்பாளர்கள் (பெண்)
- வீட்டுப் பணிப் பெண்கள்

18 வயதுக்கு மேற்பட்டவர்கள்
தொடர்பு கொள்ளலாம் 0779-172352











இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.01.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.